JL

ϖ2.11, M30 BV

M30·1·5

188771

# விஞ்ஞாபனம்

செந்தமிழ்ச் செல்வர்காள்! நந்தம் பாலவித்யா முந்திய பகுதிகள் நுந்தம் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவன்றோ? அதனை நும் அரிய காலத்திற் சிறிதளவேனும் செலவழித்துப் படித்துப் பார்த்திருப்பீர்களென்றே நம்புகிறோம். இதுவரையில் நீவிர் அப்படிப் படிக்க முடியாதிருப்பினும் இனியாகிலும் தயவுசெய்து அவைகளையும் இப்பகுதியையும் படித்துப் பார்த்துச் சந்தாதாரராகச் சேரவும், தம் நண்பர் முதலாயினோர்க்கு எடுத்துச் சொல்லி அவர்களையும் சந்தாதாரராகச் சேரச் செய்யவும் பெரிதும் வேண்டிக்கொள்கிறோம்

பாலவித்யா பரந்த பல நன்னோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறதென்பதை வேண்டுகோள் என்னும் தலைப்புப் பாடலாலே நாடறியச் சொல்லியுள்ளோம். எந்த நோக்கமும் மக்கள் பலருடைய ஆதரவைப் பெற்றாலன்றி நாட்டிற்பரவி நன்மை பயக்கும் நிலையை அடைய முடியாது. இதனை நீவிரும் உணர்ந்தே இருப்பீர். ஆகவே சந்தாதாரராகச் சேர்தலிலும் சேர்வித்தலிலும் மிக்க விரைவும் ஊக்கமுங் கொள்வீராயின் நம் நாட்டுக்கு எங்களை நல்ல தொண்டராக்குதலாகிய நற் காரியத்தைச் செய்தவர்கள் ஆவீர். எங்கள் தொண்டும் பல் நல்வழிகளிலே பரந்து பயன் தருவதாகும்.

> " ஒன்றே செய்யவும் வேண்டும் ; ஒன்றும்
> நன்றே செய்யவும் வேண்டும் ; நன்றும்
> இன்றே செய்யவும் வேண்டும் ; இன்றும்
> இன்னே செய்யவும் வேண்டும்."
>
> (கபிலர்)

பதிப்பாளர்கள்.

---

N.B.— சந்தா துகையை அனுப்பி சந்தாதாரராக சேருபவர்கள் [illegible] கிடைத்த பகுதிகள். கிடைக்கவேண்டிய பகுதிகள் [illegible] தெரிவிக்கவும்.

குறிப்பு:—சந்தாதுகை செலுத்தாதவர்கள் தாமதமின்றி M. O. செய்யவும். துகை அனுப்பாதவர்களுக்கு அடுத்த ஸஞ்சிகை V. P ல் அனுப்பலாகும். V. P.ல் அனுப்புவதில் சந்தாதாரர்களுக்கு 3அணா ஜாஸ்திசெலவு ஏற்படும்.

உ

# பால வித்யா.

(மாதப் பத்திரிகை.)

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் "
" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு "

5-JUN 1930


| தொகுதி I | 1930௵ மே௴<br>பிரமோதூத௵ வைகாசி௴ | பகுதி V |
|---|---|---|


18877
சென்னை-600 008

## கடவுள் உண்மை.

கடலூர்
தமிழாசிரியர் தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரி எழுதியது.

இப்பரந்த நிலவுலகிடை வதியும் மானிடருள் பரமார்த்திக ஞானம்வாய்ந்த படிப்பாளிகள்முதல் கல்வி கல்லாத பாமரர் இறுதியாகப் பலரும் கடவுளைப் பற்றி உரையாடுவதைக் கண்டுங் கேட்டுமிருக்கிறோம். இன்னணம், கடவுளின் உள்ள தன்மையை ஒப்பிப் பேசுவோர் தெய்வநம்பிக்கையாளர் அல்லது ஆஸ்திகர் எனப்படுவர். 'அஸ்தி' எனின் 'உண்டு' என்பது பொருளாம். இதே ஞாலத்தில் கடவுளைப்பற்றிய நம்பிக்கை, நம்பிக்கையின்மை ஆகிய இரண்டுமின்றித் தம் வாழ்வினையே பெரிதும் மதித்து நடாத்துவோரும் அமர்ந்துளர். இன்னோர், கடவுளைப்பற்றிய கவலையே திவலையுமில்லாதவராவர். இவர் தம் நெஞ்சிடை இயற்கைவழியானும், செயற்கைவழியானும் ஊறியெழும் ஈசுவரஞானம் திருவினும் கிடைக்காதென்பர். இன்னோர் ஒருசாரிருப்ப, கடவுளேயில்லையென்போரும் இக்குவலயத்துளர். இவர் தாம் பிறப்புதொட்டு இறப்புவரையும் கண்டதே காட்சி கொண்டதே கோலமாய் நாள் கடத்திவருவர். இவ்வகைத்தினர் இவ்வவனிமிசை மிகச் சிறுதொகையினராகவே நெடிதும் பண்டைக்காலந்தொட்டு இருந்துவருகின்றனர். மிகப் பழையகாலத்து ஒருக்கால் இன்னோர்தொகை மல்கியிருந்திருத்தலும் கூடும் அன்றி இடையிடையே இவ்விதத்தார் பெருகிப்பெருகி அருகியிருத்தலும் ஏற்கும். நாஸ்திக கண்டன நூல்கள் பல்கியுள்ளமை இதனை வலியுறுத்தும் சான்றாம். இந்நிரீசுவரவாதிகட்கே 'நாஸ்திகர்' எனப் பெயர். 'நாஸ்தி' என்பதற்கு 'இல்லை' என்பது திரள்பொருளாம். எனவே இம்மகிதலத்தின்கண் கடவுள் உண்மையினை ஒப்பி ஒழுகு

வோர் பெரும்பான்மையினரும், கடவுள் இருப்பினும், அன்றி இல்லா திருப்பினும் என் ? எனக் கவலையற்று வாழ்வோர் சிறுபான்மையின ரும், கடவுளே இல்லை என வாதிப்போர் அறச்சிறு கணக்கினராக வும் உளர் என்பது வெள்ளிடைவிலங்கலாம். தெய்வம் பற்றிய உலக மாந்தர்தம் பிரிவு ஈதாம். இனிக் கடவுளுண்மை, கடவுளின்மை, அவ்வுண்மையின்மையின் கவலையின்மை இவைகுறித்து ஆய்தல் செய்குவாம்.

இவ்வுலகத்துக் காணப்படும் பொருட்கள், இயற்கை, செயற்கை யென இரு கூறினவாம். நம்மால் செய்யப்படும் எப்பொருட்களும் செயற்கைப்பொருளின்பாற்படும். நம்மாற் செய்ய இயலாதன வற்றை இயற்கைப்பொருளென நாம் இயம்புகிறோம். உலகம், அதன் நிலவுக்காய பூதங்கள், உயிர்களாதியன நம்மால் ஆக்கி அளிக் கும் பெற்றித்தன அல்லவாகலின் இன்னவற்றை இயற்கைப்பொரு ளென [illegible]ேம். நம் ஒருவனால் செய்ய இயலாத ஒரு பொருள் பிறிதொருவனாலும் ஆக்கக்கூடாததாகவே இருத்தல்வேண்டும் என்ற நியதி இல்லையே. பேராற்றல் படைத்துள்ள பல்வகை யந்திரங்களும். மற்றும் கண்ணைக்கவரும் அநேக செய்பொருட்களும் நம்மால் இயன்றனவாக இன்றேனும் வேறு தக்கோர்களால் இயன்றனவாகத் தானே உள இவ்வுண்மை நமக்குப் புலப்படாதிருக்குமேல், அவற்றி னிடம் காணும் பெருமை காரணமாக அவையனைத்தும் இயற்கைப் பொருள் தாமேயோ என நாம் ஐயுறவு எய்தற்குத் தடையுண்டோ? இராதெனக் கூறுவதில் மிகையென்னே? நம்மால் நிருமிக்கக்கூடாத எப்பொருளும் இயற்கையே என நாம் கொள்ளும் பொதுக்கூற்று, அப்பொருளின் ஆக்கப்புலப்பாட்டின் பின்னர் நிலைக்கு நில்லாமற் போகின்றது. எனவே ஒரு பொருளின் இயற்கை, செயற்கை யெனும் பெயர்கள் அப்பொருளின் தோற்றுவாயுணர்ச்சியைச் சார்ந் துள்ளதென்பது வெளிப்படை. இங்ஙனமே, உலக முதலிய இயற் கைப் பொருள்களின் உற்பத்திநிலையை நாம் ஆய்ந்து நோக்குழி, அவைகளையேனும், அவைதம் ஆக்கப்பாட்டிற்குத் துணைப்பொருட் களையேனும் கண்டாரொரு திறமையாளன் இருந்தே தீருதல்வேண் டும் என அறிவோம். அத்திறனாளனுக்கு அப்பொருட்கள் செயற் கையேயாமன்றி இயற்கையாகா. அங்ஙனம் நமக்குப் பெரிதும் இயற்கையே எனத்தோற்றுமிப் பொருட்களைத் தனக்குச் செயற் கைப்பொருளாகக்கொள்வோன் நம்மிலும் அளவில் அறிவும், ஆற்ற லும் பெற்றவனேயென்பதை நாம் மறுப்பதற்கில்லை. இப்புகழா ளைத்தான் பண்டுதொட்டுப் பெரியோர் கடவுள், கடவுள் எனக் கழறு கின்றனர். அப்பெரியோர் கடவுள் உண்மையைக் கண்ட அம்மட் டோடு நில்லாது தம் பின்னோர்க்கு இது குறித்தெழும் சந்தேக விபரீ தங்களனைத்தையும் அறுப்பான் கருதிப், பற்பல சாட்சியக்கூற்றுக்களை



யும், கண்டனவுரைகளையும் தருக்கரீதியாகவும், உடன்பாட்டு வாயி லாகவும் பலபட விளம்பி நூன்முகமாகத் தொகுத்தும் வைத்துளர். இப்பொன்மொழித் தொகுதியே வேதமுதலானவைகளாம். எண் ணில் கோடியண்டங்கள் வரன்முறை வழுவாது இயங்கிவருதலும், கதிரவன், தண்மதி, உடுத்திரளாதிய ஒழுங்கின்படித் தத்தம் தொழி லாற்றும் வன்மைபெற்றிருத்தலும், உயிர்வர்க்கங்கள் தோன்றிவளர் தலும் ஆகிய இவைகள், தெளிவு சிறக்க தெய்வ உறுதிப்பாட்டை விளக்கும் நிதரிசனங்களாம். புகை கண்டான் நெருப்பிருக்கையறியு மாறு, படைப்புண்ட அளவிலிப்பொருட்களின் தோற்றவியக்கங் களைக் காண்புழி, யாம் ஈசுவரதத்துவத்தைத் தெரியவேண்டுவது நம் பொறுப்பாய் முடிகின்றது. அநுமானம், சுருதியாகிய இருவகைப் பிரமாணங்களும் தெய்வமெய்ப்பாட்டினை நன்கு நிலைநாட்டுகின்றன. கடவுளைக் காட்சிப்பிரமாணத்தால் நாமறியக்கூடாமைக்கு, நம்மிட முள்ள குறையே காரணமாகின்றதன்றி வேறில்லை. கடலினிடத் துள்ள நீரனைத்தையும் ஒரே முறையில் தான் முகந்தடக்கிக்கொள்ள வேண்டும் என்னும் பேரவாபிடித்த ஒரு அளவைநாழி இருப்பதாகக் கொள்வோம். அந்நாழியின் உட்கன அடக்கம் பரவையின் பெருநீர் மையை எண்ணுங்கால் எத்துணையோ சிறுமையுடைத்தல்லவா? வேண்டுமேல் அக்கருவி தன் அளவுக்குத்தக முகந்துகொள்ளல் கூடும். இதேபோலத்தான் உள்ளது கடவுளைக் காட்சிப்பிரமாணத் தால் காண எண்ணுவோர் நிலைவும். நம் அறிவும் ஆற்றலும் வரம் புக்குட்பட்டுச் சுருக்கமுடைமையின் நாம் காட்சியால் உணர்ந்து தெளிதல் சாத்தியமுடைத்தன்று. கடவுளின் பரிபூரணத்தன்மை காட்சியால் கண்டுகோடற்கெளிதல்லவாம். இதுகாறும் கூறிய வாற்றால் கடவுள் ஒருவர் உண்டு என்பது மலைவிளக்காம். முட்டை கோழித்தோற்ற விவாதமும் வித்து மரத்தோற்ற விவாதமும் கட வுள் உண்மையை உறுதிப்படுத்த வந்தனவே ஆகும். இத்தரணியில் உள்ள பல்வகைச் சமயங்களின் எழுச்சிக்கும், அவைதம்மின் வளர்ச் சிக்கும் தெய்வ நம்பிக்கையே உயிர்நாடியன்ன உதவிபுரிவதாம். இந்நம்பிக்கை அறுமேல் சமயகட்டிடம் சீர்குலைந்து அழிந்துபடும். பொய்யைப்பற்றி யுதித்துலவும் நம்பிக்கைபோல்வதன்றி நம்புதல் உண்மையையும், அழியாததையுமே பற்றுக்கோடாக்கொண்டு பரவுவ தாகும்.

இனி, இத்தெய்வ நம்பிக்கை கொள்வது நன்றா அன்றா எனக் கூர்ந்துன்னுவாம். நிலையாமைக் குறைவிடமாகிய எத்துணையோ பொருட்களை நம்பி நம்பி இறுதியில் மோசம்போதலின் சகமுதலாய பலவற்றுக்கும் நாயகமாயும், சாசுவதமான தாயுமுள்ள இதனிடத்தில் அந்நம்பிக்கையைச் செலுத்திப் பயன்துய்ப்பது சால நன்றேயாம். இதனால் இடர்ப்பாடு எட்டுணையும் இலதாம்.

ஒரூரில் ஒரு செல்வமுள்ள குடும்பத்தில் இருவர் ஆண்மக்கள் இரட்டையராய்த் தோன்றினர். சிசுக்கள் பிறந்ததும் தந்தை ஏதோ வாணிபகாரியமாக வேற்றுநாடேகினான். செல்லுங்கால், தன் மனையாளிடம் குழந்தைகளைச் செவ்வனே பரிபாலித்துவருமாறும் தான் பத்து ஆண்டுகள் சென்று மீள்வதாயும் கூறிச் சென்றான். அக்குழவிகள் ஓராண்டடைந்தன. அவ்வமயம், சென்ற தந்தை தன் உடல் நலங்குன்றியமையின், தன் இல்லாளை, இளம் குதலைகட்குத் தக்க ஏற்பாடுகள் செய்து தனக்குதவியாக வரும்படி நிருபம் விடுத்தான். அதுகண்ட அவன் காதலி தன் மெத்த நற்குணமுடைய உடன்பிறந்தானிடம், உற்றதுகூறித் திரண்ட தம் செல்வத்தையும், செல்வர்களையும் ஒப்புவித்துத் தன் கணவன்பாற் சேர்ந்தாள். அவ்வுடன்பிறந்தானும், அவன் மனைவியும் அம்மைந்தர்களைத் தம் சொந்தப் புதல்வர்களெனக்கொண்டு, கண்ணினைக்காக்கின்ற இமையிற் காத்து வருவாராயினர். பலவருடங்கள் கடந்தன. அவ்விரு சிறார்களும் செவ்வனே வளர்ந்துவந்தனர். ஒருவன் சிறிதளவு கல்வியும் கற்றான். மற்றவனோ எனின், கல்வியைப் பெரிதும் புறக்கணித்துத் தீய நடத்தையும் தீயார் சேர்க்கையும் உடையவனாயினான். கல்வியுள்ளவன் தம் பெற்றோரைப்பற்றி வளர்ப்பாரிடம் அடிக்கடி உசாவி, பெற்றோர் காண நேருகையில் கல்வி ஒழுக்கமுதலியவைக் குறித்துத் தன்னைப் புகழ்ந்துவக்குமாறு நடந்துவந்தான். ஊராரும், இச்செல்வ மகனைக் கண்டிறும்பூதெய்தாமல் பெற்றோர் வேற்றிடத்தே காலங் கடத்துகின்றனரே எனச் சொல்லிவரலாயினர். தீயாரிணக்கமுற்றவனோ பெற்றோரே தனக்கில்லை எனவும் இருப்பின் இவ்வளவு வருடங்களாகியும் வாராதொழிவாரா எனவும் எண்ணி, நாடோறும் தீய வழிகளையே மேற்கொண்டொழுகித் தீயனானான். உற்றாரும், ஊராரும் பெற்றோர் வந்து காணின் சினமீக்கொண்டு தண்டிப்பரெனப் பல்கால் இடித்துரைத்தும் அவர்தம் உரையினைப் பெரும் பொய்யெனக் கூறித் தான் இழிவே புரிவானானான். அப்புன்மையன், ஒரோருக்கால், பெற்றோருண்மைக்கூற்றை முற்றும் நம்பும் தன் சோதரனைக் கடிந்துரைப்பான். தனக்குரிய பாகமாகும் செல்வத்தை ஈந்திடும்படி பாதுகாப்பவரிடம் அடிக்கடி வழக்கிடுவான். அவர் உன் பெற்றோர் வந்தபின் கேட்டடைகவெனக் கூறின், அவர் தம்மை வஞ்சித்தற்கே இங்ஙனம் சொல்லி நாள் செலுத்துகிறாரென வசை கூறிப் பழிப்பான். களர் நிலத்தில் நற்பயிர் விளையுமோ? தீயோன் தன் நிலைக்கேற்பத் தானே தீயசொற்களைச் சரமாரியாகப் பொழிவனன்றோ?

இப்படி ஆண்டுகள் பதினெட்டானபின் தம் வாணிபத்திற் பெருலாபமீட்டி அவ்வாலிபரின் பெற்றோர்கள் தம்மூர் திரும்பினர்.

(தொடரும்) (Copyright reserved by the Author.)



நோக்கி நடந்தான். பிறகு, அவனுடைய முகத்தைக் கூர்மையாய்க் கவனித்தவண்ணம்,

"குமரவேல்! நீ மிகவும் யோக்கியனென்றே நம்புகிறேன்." என்று கூறவே, அவ்வேலைக்காரன், ஒன்றும் அறியாமல், திகைத்து,

"ஸ்வாமி! நீங்கள் பேசுவதின் அர்த்தம் எனக்கு விளங்கவில்லையே." என்றான்.

சபேசன்:—"சரி. இப்பொழுது நாம் அனாவச்யமாய்ப் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. உள்ளதைச்சொல், மூர்த்தி அக்கடிதத்தை யாரிடம் கொடுக்கச் சொன்னான்."

குமரவேல்:—"ஸ்வாமி! —ஸ்வாமி—"

சபேசன்:—"அடே! நான் சொல்வதைக் கேள். நீ என்னை ஏமாற்ற முடியாது. உடனே உள்ளதைச் சொல்!"

சபேசன் முகத்தில் காணப்பட்ட தீர்மானத்தையும் அவனுடைய பேச்சின் அதிகாரத்துவனியையும் கண்ட குமரவேல், தான் புளுகுவதில் பிரயோஜனமில்லையென்று நினைத்தவன்போல்,

"ஸ்வாமி! நான் எதற்காக உங்களை ஏமாற்றவேண்டும்? இன்னும் எனக்கு உங்களிடமுள்ள மரியாதையை நீங்களேயறிவீர்கள்." என்றான்.

சபேசன்:—"வாஸ்தவம்! அப்படியானால், உடனே அக்கடிதத்தை என்னிடம் கொடுத்துவிடு."

இதைக் கேட்டதும், குமரவேல் திடுக்கிட்டான். உடனே அவனுடைய முகத்தில் சினத்தின் குறிகள் தோன்றின. அவன்,

"ஐயா! பிறருடைய கடிதத்தை வாசிப்பது உங்களைப்போன்ற படித்தவர்களுக்கழகன்று." என்றான்.

சபேசன்:—"அழகன்று என்பதை நானே ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனாலும், அக்கடிதத்தை நான் அவசியம் பார்க்கவேண்டும்."

குமரவேல்:—"ஸ்வாமி! உங்களுடைய நடத்தையைக் காண எனக்கு மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. நான் அதை ஒருபொழுதும் உம்மிடம் காட்டமாட்டேன்."

சபேசன்:—"குமரவேல்! நீ பிடிவாதம் பண்ணுவாயாகில் வீணாய்க் கெட்டுவிடுவாய். நீ உடனே அக்கடிதத்தை என்னிடம் கொடுக்காதபக்ஷத்தில், அதோ நிற்கும் போலீஸ்காரனையழைத்து உன்னைக் கைதுசெய்யச் சொல்லுவேன்." என்று பயமுறுத்தவே, குமரவேலுடைய கைகால்கள் நடுங்க ஆரம்பித்துவிட்டன.

குமரவேல்:—"நான் என்ன குற்றம் செய்துவிட்டேன்? என்னை போலீஸ்காரன் எதற்காக கைதுசெய்வான்?"

சபேசன்:—"அடே! அக்கடிதம் உன்னிடமிருப்பது மிகவும் அபாயத்திற்கிடம். ஆகையால், சற்றும் தாமதிக்காமல், உடனே அதை என்னிடம் கொடுத்துவிடு."

குமரவேல்:—"ஸ்வாமி! அதைப் பார்த்துவிட்டு, உடனே என்னிடம் திருப்பிக்கொடுத்துவிட—"

சபேசன்:—"முதலில் அதைக் கொடு பார்ப்போம்."

கடைசியில், குமரவேல், வேறு வழியில்லாமல் கடிதத்தைச் சபேசனிடம் கொடுக்க, அவன், ஆவலுடனும், அவசரத்துடனும், அதை பிரித்துக் கீழ்க்கண்டவாறு வாசித்தான்:—

"உன் வீட்டிற்கு வந்து யார் என்னைப்பற்றி விசாரித்தபோதிலும் நான் நேற்று இரவு 8 மணியிலிருந்து, இன்று காலை 7 மணி வரையில் உன்னுடனிருந்ததாகக் கண்டிப்பாய்ச் சொல்லிவிடவும். இன்னும், நேற்று மாலை நான் உனக்கு வாங்கிவந்து கொடுத்த வஸ்துக்களை உடனே ஒளித்துவைத்துவிடு. மறக்கவேண்டாம்! மறக்கவேண்டாம்!"

சபேசனுக்குண்டான வியப்பையும் திகைப்பையும் சொல்லி முடியாது. மறுபடியும், அக்கடிதத்தை மடித்துத் தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டான். அதைக் கண்ட குமரவேல்,



"ஸ்வாமி! தயவுசெய்து அதை என்னிடம் கொடுத்துவிடும்." என்று கெஞ்ச, சபேசன்,

"அடே! அதனால் ஒன்றும் பாதகமில்லை. அதை நானே கொண்டுபோய்க் கொடுத்துவிடுகிறேன்." என்றான். குமரவேல், ஆச்சரியப்பட்டவனாய்,

"அதை யாரிடம் கொடுக்கவேண்டுமென்பது உங்களுக்கெப்படித் தெரியும்?" என்று வினவ, சபேசன்,

"அது தாஸி ராஜலெக்ஷ்மிக்கென்பது எனக்குத் தெரியும். சரி! நான் சொல்வதைக் கவனி. நம்மிருவருக்குள் நடந்த இவ்விஷயத்தை யாரிடமும் சொல்லாதே. மூர்த்தி உன்னைக் கேட்கும்பக்ஷத்தில் நீ கடிதத்தை அவளிடம் கொடுத்துவிட்டதாகவும், அவள் அவன் சொன்னபடியே அவசியம் செய்வதாகச் சொன்னாளென்றும் சொல்லிவிடு. என் சொல்லுக்கு விரோதமாய் நீ நடப்பாயாகில் நிரம்பவும் கஷ்டப்படுவாய். உஷார்!" என்று கூறிவிட்டு, மேலும் அங்குத் தாமதிக்காமல், துரிதமாய் நவநீதஸ்வாமிகோவில் ஸந்நிதியை நோக்கி நடந்தான். வழியில், "சரி! குமரவேல் எழுதப்படிக்கத்தெரியாதவன் என்ற தைர்யத்தினால் இக்கடிதத்தையவனிடம் கொடுத்தனுப்பி இருக்கிறான்." என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

கடைசியில், அவன் தாஸி ராஜலெக்ஷ்மியின் வீட்டையடைந்ததும், சற்றும் தயக்கமின்றி அதற்குள் நுழைந்தான். அதன் முன் கூடத்தில் ஒருவரும் காணப்படவில்லை. அவ்விடம், பார்ப்போர் பிரமிக்கும் விதம் அலங்கரிக்கப்பட்டிருந்தது! எப்பக்கம் திரும்பியபோதிலும், பெரிய நிலைக்கண்ணாடிகள் தென்பட்டன! விசித்திரமாய் வேலைசெய்யப்பட்ட பல நாற்காலிகள், மிகவும் விலையுயர்ந்த ஒரு மேஜையைச் சுற்றிலும் போடப்பட்டிருந்தன! சபேசன் ஒரு தரம் நாலாபக்கங்களையும் கவனித்தான். பிறகு கொஞ்சநேரம், தன் சுவாஸத்தை மெல்ல உட்கொண்டவாறு நின்றுகொண்டிருந்தான். அதற்குக் காரணம், அவ்வறையிலும், மடத்துத்தெருவில், சவத்தின் அருகாமையிலி

ருந்து கண்டெடுக்கப்பட்ட கைக்குட்டையிலிருந்து வெளிக்கிளம்பிய அதே வாஸனை வீசிக்கொண்டிருந்தது! பிறகு, தன் மூக்கைத் தன் விரல்களால் நெருடிக்கொண்டே, மறுபடியும் கூர்மையான பார்வையுடன், அவ்வறையைக் கவனித்தான். திடீரென்று ஓரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, சமீபத்தில் காணப்பட்ட ஒரு ஸோபாவின்மீது கிடந்த ஒரு கைக்குட்டையைக் கையிலெடுத்தான். அது தற்சமயம், போலீஸ் இன்ஸ்பெக்டர்வசமிருந்த கைக்குட்டையைப் போலவேயிருந்தது! இன்னும், அந்த ஸோபாவின்கீழ், அழகிய ஒரு அட்டைப்பெட்டி கிடக்க, அதையெடுத்துக் கவனித்தான், அப்பெட்டியின் ஒரு பக்கத்தில், ஒரு முத்திரை காணப்படவே, அதிகரிக்கும் ஆச்சர்யத்துடனும், சந்தோஷத்துடனும், அதை வாசித்தான். அம்முத்திரையில், கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது:— "ராமராவ் அண்டு கம்பெனி, கடைத்தெரு, கனகபுரி."

பிறகு, சபேசன், மெல்ல திருடனைப்போல், நாலாபக்கங்களையும் பார்த்துக்கொண்டு, அக்கைக்குட்டையை தன் மடியில் சொருகிக்கொண்டான். மறுநிமிஷம், அவ்வறையை நோக்கி யாரோ வேகமாய் வரும் சப்தம் அவன் செவிகளில் விழவே, சற்றும் சந்தடிசெய்யாமல், வெளிக்கதவையணுகி, அப்பொழுதே அவ்வீட்டிற்குள் நுழைந்தவன்போல் நின்றுகொண்டான். அதே சமயம், பரபரப்புடன் அங்குத்தோன்றிய தாஸி ராஜலெக்ஷ்மி, அவனிருப்பதைப் பார்க்காமல், அங்கு மிங்கும் எதையோ தேடிக்கொண்டிருந்தாள். கடைசியில் அவள்,

"அடி அம்புஜம்!" என்றழைக்க, சுமார் 25 வயதுள்ள ஒரு வேலைக்காரப் பெண், அங்கு வந்ததும்,

"ஏண்டி! என்னுடைய கைக்குட்டையை நீ பார்த்தாயோ?" என்று வினவினாள். அம்புஜம் தான் பார்க்கவில்லையென்று சொல்லவே,

"அடாடா! நேற்றுத்தானே அவர் அவ்வளவு பிரியத்துடன் வாங்கிக்கொண்டுவந்து கொடுத்தார். இதற்குள்



தொலைத்துவிட்டேனே!" என்று வருத்தத்துடன் பெருமூச்செறிந்துகொண்டே, "சரி தொலையட்டும்! மாடியிலே பீரோவிலிருந்து வேறொன்று எடுத்துவா." என்று உத்தரவிட்டாள். அம்புஜம் சென்றதும், ஆயாசத்துடன் பக்கத்திலிருந்த ஒரு ஸோபாவில் உட்கார்ந்துகொண்டவள், கதவின் சமீபத்தில் நின்றுகொண்டிருந்த சபேசனைக் கண்டதும், திடுக்கிட்டவளாய்,

"ஐயா! நீங்கள் யார்? என்ன வேண்டும்?" என்று மரியாதையுடன் வினவினாள். சபேசன், சாந்தமாய்,

"நான் மூர்த்தி அய்யரால் உங்களிடம் அனுப்பப்பட்டேன்." என்று விடையளிக்க, ராஜலெக்ஷ்மியின் மரியாதை அதிகரித்தது. அவள்,

"அப்படியா? வாருங்கள்; உட்கார்ந்துகொள்ளுங்கள்." என்று ஒரு நாற்காலியைக் காண்பித்தவண்ணம், "ஆமாம்! நேற்று இரவு அவர் கண்டிப்பாய் வருவதாகச்சொன்னாரே? ஏன் வரவில்லை?" என்று கேட்க, சபேசனுக்குண்டான சந்தோஷத்திற்களவில்லை. ஆனாலும், தன் ஆச்சர்யத்தையும், களிப்பையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல்,

"அதன் காரணம் எனக்குத் தெரியாது. ஒருகால் அவர் இக்கடிதத்தில் எழுதியிருப்பார்." என்று அக்கடிதத்தை அவளிடம் கொடுத்தான்.

ராஜலெக்ஷ்மி ஆவலுடன் அதை வாசித்ததும் திடுக்கிட்டாள். பிறகு கொஞ்சநேரம் சிந்தனையிலாழ்ந்திருந்தாள். கடைசியில் சொல்லமுடியாத கவலையுடன்,

"ஏன் ஸ்வாமி! அவர் வீட்டில் ஏதேனும் விசேஷமுண்டோ?" என்று வினவ, சபேசன், மிகவும் வருத்தத்துடன்,

"உண்டு! தற்சமயம், அவருடைய தந்தை மடத்துத் தெருவில் கொலைசெய்யப்பட்டுக்கிடக்கிறார்." என்று விடையளித்தான்.

"என்ன? என்ன சொன்னீர்? ஸ்வாமி! நீர் சொல்வது நம்பத்தக்கதாயில்லையே?" என்று வீறிட்டாள். சபேசன்,

"இருக்கலாம்! ஆனால், நான் சொல்வது உண்மை." என்றான்.

மறுபடியும் ராஜலெக்ஷ்மி கொஞ்சநேரம் சிந்தித்தவாறு நின்றாள். பிறகு உறுதியுடன்,

"சரி! நீங்கள் அவரிடம், அவர் சற்றும் கவலைப்படவேண்டாமென்றும், அவர் சொன்னபடியே நான் கண்டிப்பாய்ச் செய்வதாகச் சத்தியம் செய்ததாகவும் சொல்லுங்கள்." என்று அவள் சொல்லிக்கொண்டேயிருக்கையில், வேலைக்காரி அம்புஜம் அங்கு வந்து, அச்சமயம் சபேசன் மடியிலிருந்ததைப் போன்ற ஒரு கைக்குட்டையைத் தன் யஜமானியிடம் கொடுத்தாள்.

சபேசன், "அம்மா! நான் போய்வருகிறேன். உங்களுடைய பேச்சிலிருந்தே உங்களுக்கு, என் நண்பரிடம் அளவுகடந்த மரியாதையும் பிரியமும் உண்டென்பதில் சந்தேகமில்லை! அவர், தற்சமயம் பெரிய ஆபத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறாரென்பதையும், அவரைத் தப்புவிக்க உங்களால்தான் முடியுமென்பதையும் நான் சொல்லவேண்டியதில்லை—" என்று அவன் மேலே பேசுமுன், அவ்வீட்டிற்கெதிரில் ஒரு குதிரைவண்டி வந்து நிற்க, அதிலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் முனிசாமி நாயுடு இறங்குவதைக் கண்டதும், "அம்மா! அதோ போலீஸ் இன்ஸ்பெக்டர் வருகிறார். ஜாக்கிரதை!" என்று தாழ்ந்த குரலில் சொல்லிவிட்டு, தன்னைப் போலீஸ் இன்ஸ்பெக்டர் கொலை நடந்த இடத்தில் பார்த்திருப்பதால், தானங்கிருப்பதைக் காணும் பக்ஷத்தில் சந்தேகத்திற்கிடமென நினைத்து, பக்கத்திலிருந்த ஒரு அறைக்குள் தாவி, ஒளிந்துகொண்டான். நல்லவேளையாய், அவ்வறையிலிருந்தும், வெளியே செல்ல ஒரு கதவிருப்பதைக் கண்டு, திருடன்போல் நழுவிவிட்டான்.



சபேசன், அவ்வீட்டைவிட்டு வெளியே வந்ததும், எங்கும் தாமதிக்காமல், கடைத்தெருவிலிருந்த ராமராவ் அண்டு கம்பெனியை நோக்கி நடந்தானென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. அங்கு ஒரே கூட்டமாயிருந்தது. கடைசியில், அக்கடையின் சொந்தக்காரரைச் சந்தித்து, தன் மடியிலிருந்த கைக்குட்டையை வெளியிலெடுத்து, அதை அவரிடம் காண்பித்துக்கொண்டே,

"ஐயா! உங்களிடம் இம்மாதிரி கைக்குட்டையகப்படுமோ?" என்று விசாரித்தான். ராமராவ்,

"தாராளமாயகப்படும்! நேற்றுத்தான் இதே தினுசில் ஒரு டஜன் ஒருவருக்குக் கொடுத்தோம்." என்று சொல்லிக்கொண்டே, திரும்பி ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்த ஒரு பையனைப் பார்த்து,

"டேய்! கொமரசாமி! இவருக்கு அந்த 13 நம்பர் பட்டுக்கைக்குட்டைகளைக் கொண்டுவந்து காண்பி." என்று கட்டளையிடவே, கொமரசாமி, சற்றும் தாமதமின்றி அவைகளைக் காண்பித்தான். சபேசன் அவைகளை நன்றாய்ப் பார்த்துவிட்டு,

"சரி! இதன் விலையென்ன சொல்லுங்கள்!" என்றான்.

ராமராவ், "உங்களுக்கு எவ்வளவு வேண்டும்?" என்று கேட்க, சபேசன் 'எனக்கும் ஒரு டஜன் தேவை' யென்று விடையளித்தான். ராமராவ், இருபத்தைந்து ரூபாயாகுமென்று சொல்லவே, சபேசன், திடுக்கிட்டவன் போல்,

"என்ன? இருபத்தைந்து ரூபாயா? ஏன் ஸ்வாமி! இதற்கு இவ்வளவு விலையிருக்குமென்று நான் சுவப்பனத்திலும் நினைக்கவில்லையே!" என்றான்.

ராமராவ், "ஐயா! எங்கள் கடையில் இரண்டு விலை சொல்லும் வழக்கமில்லை! வேண்டுமானால், நேற்று வாங்கியவர், என்ன கொடுத்திருக்கிறாரென்று பாரும்." என்று

சொல்லிவிட்டு, பக்கத்திலிருந்த தன் கணக்குப்பிள்ளையை நோக்கி,

"ஓய்! சிதம்பரய்யரே! நேற்று மைனருக்கு கைக்குட்டை கொடுத்தோமே; என்ன விலை எழுதியிருக்கிறீரென்பதை இவரிடம் காண்பியும்." என்று சொல்லச் சிதம்பரய்யர், ஒரு நோட்டுப்புஸ்தகத்தையெடுத்து அதைப் பிரித்து, ஒரு பக்கத்தை சபேசனிடம் காண்பித்தார். அதில், "மூர்த்தி அய்யர், டபீர்த்தெரு, கனகபுரி" என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருந்த பல சாமான்களின் முடிவில், '13 நம்பர் பட்டுக்கைக்குட்டை—ஒரு டஜன்—விலை ரூ. 25' என்று எழுதப்பட்டிருந்தது.

---

## அத்தியாயம் 7.

கடைசியில் சபேசன், மறுபடியும் தாண்டவமய்யர் வீட்டிற்குத் திரும்பியபொழுது, அங்கு சமீபத்தில் தன் நண்பன் பாலகிருஷ்ணன் நின்றுகொண்டிருப்பதைக் காணவே, அவன் இனி அங்குத் தாமதிக்கவேண்டிய அவசியமில்லையென்றும், ஆனால் அன்று மாலை 4 மணிக்கு அதேயிடத்தில் தன்னை மறுபடியும் சந்திக்கும்படியும் சொல்லியனுப்பிவிட்டு, அவ்வீட்டிற்குள் நுழைந்தான். அதில் அதற்குள் தாண்டவமய்யருடைய பந்து ஜனங்களும், இதர சிநேகிதர்களும் ஏராளமாய் வந்து கூடியிருந்தனர். ஏற்கனவே வைதீகக்கிரியைகள் துவக்கமாய்விட்டன. அவ்வீட்டின் முன்கட்டில் வெள்ளைத்துணியால் காலிலிருந்து தலைவரையில் மூடப்பட்டுக்கிடந்த சவத்தைச் சுற்றிலும் பெண்மணிகள் பலருட்கார்ந்துகொண்டு அழுதவண்ணமிருந்தனர். அவர்களுடைய மத்தியில், ஜானகி தன் சுயநினைவற்றவள்போல், ஒரு வயதுமுதிர்ந்த மாதின்மீது சாய்ந்து



கொண்டிருந்தாள். அவள் பத்து நிமிஷத்திற்கொருதரம், தன் கண்களைத் திறந்து, பிரமையுடன் பக்கத்திலிருப்பவர்களைக் கவனிப்பதும், கடைசியில் அவளுடைய பார்வை சவத்தின்மேல் விழுந்ததும் "ஐயோ! அப்பா!" என்று அலறியவண்ணம், அதன்மேற் பாய்ந்து அதைக் கட்டிக்கொண்டு கதறுவதுமாயிருந்தாள். நிற்க, பக்கத்திலிருந்த ஒரு அறையில், தன் வாயில் ஒரு சவுக்கத்தைத் திணித்துக்கொண்டு பைத்தியம் பிடித்தவன்போல் காணப்பட்ட ராஜேந்திரனுடைய பரிதாப நிலைமையை வர்ணிப்பது வருத்தத்தை மிகுவிக்கும்.

இங்கு அவ்வீட்டுச் சமையற்காரனாகிய, கிருஷ்ணனைச் சற்றுக் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியம். அவன் தன் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாய்க்கொட்ட, ஒரு மூலையில் நின்றுகொண்டு, பிரேதத்தை யுற்று நோக்கியவண்ணமிருந்தான். கடைசியில் அதைச் சுற்றியிருந்த பெண்களின் கூட்டம் கலையவே, ஆவலுடன் அதையணுகி அதன் பக்கத்தில் மண்டிபோட்டுட்கார்ந்துகொண்டு, தேகங் குலுங்க அழுவாரம்பித்தான். பிறகு அதை மூடிக்கொண்டிருந்த துணியை மெல்ல விலக்கி அதன் முகத்தை யுற்றுநோக்கினான், புலம்பிக்கொண்டே, கடைசியில் அதன் கரங்களையெடுத்து மரியாதையுடன் தன் நேத்திரங்களில் ஒத்திக்கொண்டான். ஆனால் திடீரென்று திடுக்கிட்டான். பிறகு சுமார் இரண்டு நிமிஷ நேரம்வரையில் அக்கைகளின் விரல்களை கவனித்தவண்ணம் இருந்தான். வர வர அவனுடைய முகம் ஆச்சர்யத்தினால் மாறியது. ஏதோ சந்தேகங்கொண்டவன்போல், சவத்தின் முகத்தைத் திருப்பி அதன் காதுகளைக் கவனித்தான். மறுபடியும் திடுக்கிட்டவனாய்த் தன் கண்களையே நம்ப இஷ்டப்படாதவன்போல் காணப்பட்டான். கடைசியில் பெருமூச்செறிந்துகொண்டே, சவத்தை மறுபடியும் மூடிவிட்டு அவ்விடத்தைவிட்டெழுந்துபோய்விட்டான்.

நிற்க, வைதீகர்களின் மத்தியில் காணப்பட்ட மூர்த்தியை அச்சமயம் பார்த்தவர்கள் ஆச்சர்யப்படாமலிருக்க

முடியாது. இவ்விதம் திடீரென்று இறந்ததினால், சற்றும் வருத்தமடைந்தவனாய்க் காணப்படவில்லை. ஆனால், சந்தோஷப்பட்டானென்றும் சொல்வதற்கில்லை. அவனுடைய முகம் வெளுத்தேயிருந்தது. அவனுடைய கண்களின் கலவரப்பார்வையிலிருந்தும், அது நிம்மதியற்றுச் சதா அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்ததிலிருந்து, அவனுடைய கவனம் தான் செய்யும் காரியங்களிலில்லாமல், எப்பொழுது தான் அவ்விடத்தைவிட்டுத் தப்பியோடுவோமென்று அவசரப்பட்டானென்பதை எளிதில் கண்டுகொள்ளும்படியிருந்தது.

பிறகு நடந்த விஷயங்களையெல்லாம் இங்கு விவரித்து எழுதவேண்டிய அவசியமில்லை. கடைசியில் பிரேதத்தைத் தகனம் செய்துவிட்டு, அவர்கள் ருத்ரபூமியிலிருந்து திரும்பும்பொழுது மாலை 5 மணிக்குமேலாய்விட்டது. பிறகு, அக் கூட்டம் பாலக்கரையையடைந்ததும், மூர்த்தி, தன் வீட்டிற்குப் போகவெண்ணி, டபீர்த்தெருவின்பக்கம் திரும்பவே, ராஜேந்திரன், மரியாதையுடன் அவனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு,

"அண்ணா! இன்னும் நீ பழைய மனஸ்தாபங்களை மனதில் வைத்துக்கொண்டிருப்பது அழகல்ல. இனி நம் குடும்பத்திற்கு நீயே பெரியவன் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. ஆகையால் இனிமேல் நீ தனியாயிருக்கு மெண்ணத்தை உடனே விட்டுவிடவேண்டும்." என்று கெஞ்சினான்.

ஆனால், அவன் பேசியதைச் சற்றும் லக்ஷியம் செய்யாமல் மூர்த்தி, "அதனால் ஒன்றும் பாதகமில்லை." என்று சொல்லிக்கொண்டே, டபீர்த்தெருவை நோக்கி வேகமாய் நடந்தான். அக்கூட்டத்திலிருந்து பிரிந்ததும் அவனுடைய பரபரப்பும் கலவரமும் அதிகரித்தன. கடைசியில் தன் வீட்டை யடைந்ததும், அவசரத்துடன் கதவைத் திறந்துகொண்டு மாடியில் தன்னறையைநோக்கி யோடினான். அங்குச்சென்றவன் திடுக்கிட்டு மரம்போல் நின்றான்.



அதற்குக் காரணம், அவ்வறையின் கதவுகள் நன்றாய்த் திறந்திருந்தன. "என்ன ஆச்சர்யம்! நான் போகும்பொழுது இதைப் பூட்டிக்கொண்டுபோனது எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறதே! ஹே தெய்வமே! நான் ஒளித்து வைத்திருந்த அவைகள் காணாமற்போயிருந்தால் என் கதி என்னவாகும்?" என்று தனக்குள் சொல்லிக்கொண்டே, பைத்தியம்பிடித்தவன்போல், அதற்குள் பாய்ந்து, அங்குக் காணப்பட்ட ஒரு பெரிய பெட்டியைக் கவனித்ததும், மறுபடியும் திடுக்கிட்டான். அதன் பூட்டும் உடைக்கப்பட்டுத் தரையில் கிடந்தது. அந்தோ! அச்சமயம், அவன் பட்டபாட்டை யெடுத்து எழுதுவதே பாபம்! இதற்குள் அவனுடைய சரீரம் முழுவதும் நடுங்கிக்கொண்டிருந்தது. மறு நிமிஷம் "ஐயோ!" என்று வீறிட்டலறினான். அவன் பயந்தவிதம், அவன் ஒளித்துவைத்திருந்த வஸ்துக்கள் காணப்படவில்லை, சுமார் கால்மணி நேரம் மனம் பதற, அப்பெட்டியை யுற்று நோக்கியவண்ணமிருந்தான். பிறகு "சரி! இனி நான் தப்ப வழியில்லை." என்று புலம்பிக்கொண்டே, எழுந்து நின்றான். ஆனால், நிற்கமுடியவில்லை. தலை சுற்றவே, அதைத் தன் இருகரங்களாலும் பற்றிக்கொண்டான். இன்னும், காலை 7 மணியிலிருந்து அன்ன ஆகாரமில்லாததால், மறுநிமிஷம் வெட்டுப்பட்ட மரம்போல் மூர்ச்சையுற்று தரையில் விழுந்தான்.

மறுபடியும், அவன் தன் சுயநினைவை யடைந்தபொழுது எங்கும் இருள் சூழ்ந்துகொண்டிருந்தது. கடைசியில் சிரமத்துடன் எழுந்து நின்றான். பிறகு நெருப்புப்பெட்டியொன்றைத் தேடியெடுத்து, விளக்கையேற்றிவிட்டுக் கொஞ்சநேரம் பிரமையுடன் நின்றுகொண்டிருந்தவன், கீழே வாசற்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்க சென்று பார்த்ததில், அது தனக்கு வழக்கமாய் ஹோட்டலிலிருந்து சாப்பாடு கொண்டுவரும் பையன் என்பதைக் கண்டான். ஆனால், தனக்கு அன்று சாப்பாடு தேவையில்லை யென்று சொல்லி அப்பையனை அனுப்பிவிட்டு மறுபடியும் மாடிக்குச் சென்றவன் அங்கு தன்மேஜைமேல் ஒரு கடிதமிருப்பதைக்

கண்டு வியப்புற்று, அதை யெடுத்துக் கீழ்க்கண்டவாறு வாசித்தான்:

“மூர்த்தி அய்யருக்கு,

நீர் இன்று இரவு 10 மணிக்குள்,......தெருவில் 13ம் நம்பர் வீட்டிற்கு வந்து என்னைப் பார்க்காதபக்ஷத்தில், நாளைப் பொழுது விடியுமுன் கைதுசெய்யப்படுவீர்.

எல்லாமறிந்தவன் !”

பாவம்! இதை வாசித்ததும், பயத்தின் மிகுதியால், அக் கடிதத்தை தன்னை யறியாமலே தன் கையிலிருந்து நழுவவிட்டான். ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம் அதை மறுபடியும் எடுத்துப் பலதரம் வாசித்தான். பிறகு, பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியில் பொத்தென்று விழுந்தான்.

“சரி! இக்கடிதம் எழுதியிருப்பவன் இலேசானவனல்ல! இன்னும் இவனே, அவைகளைக் களவாடியிருக்க வேண்டும்! ஆனால் இவன் யாராயிருக்கக்கூடும்? இருக்கட்டும்! இச்சமயம், நான் பயத்திற்கு இடங்கொடுப்பது மிகவும் பிசகு.” என்று அவன் எவ்வளவோ பிரயத்தனப்பட்டும், மனதில் சமாதானம் உண்டாகவில்லை. ஆயினும் “இக்கடிதத்திலிருந்து இதை யெழுதியிருப்பவன், என்மீது சற்றும் தயா தாக்ஷிண்யம் வைப்பானென்று நம்ப இடமில்லை. எல்லாவற்றிற்கும் இவனைப் போய்ப் பார்க்கவேண்டியது அவசியம்.” என்று தீர்மானித்து, எதிரில் காணப்பட்ட ஒரு கடியாரத்தைப் பார்க்க ஏற்கனவே மணி 10½ ஆய்விட்டதைக்கண்டு திடுக்கிட்டான். “ஓஹோ! சுமார் 3மணி சாவகாசம் நான் பிரக்ஞையற்றிருந்திருக்கிறேன்!” என்று ஆச்சர்யப்பட்டவனாய் எழுந்து வெளியிற் செல்லத் தயாரானான்.

பிறகு, அவன் வீட்டைவிட்டு வெளியே வந்தபொழுது பக்கத்து வீட்டுத் திண்ணையிலுட்கார்ந்துகொண்டிருந்த ஒருவன், பெருமூச்சு விட்டுக்கொண்டு, மூர்த்தி தன்னைப் பார்க்காவண்ணம், இருட்டில் பதுங்கிக்கொண்டான்.



அவன் நம் சபேசனேயென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை.

நிற்க, மூர்த்தி, சற்றும் தாமதிக்காமல், வேகமாய் நடக்க ஆரம்பித்தான். சபேசன், அவன் சற்றும் சந்தேகிக்க வகையின்றி அவனைப் பின்பற்றிச் சென்றான். சுமார், முக்கால் மணிநேரம் வரையில் நடந்துகொண்டேயிருந்த மூர்த்தி, கடைசியில் ஒரு சந்திலிருந்த ஒருவீட்டின் முன்பு நின்று, அதன் கதவை மெள்ளத் தட்டவே, அது உடனே திறக்கப்பட்டது. அவனுக்குத் தன்னை யெதிர்பார்ப்பவன் யாரென்பது சற்றும் தெரியாதாகையால், மேலே என்ன செய்வதென்பதை யறியாமல் தயங்கியவண்ணம் நிற்க, கதவைத் திறந்தவர்,

“ஐயா! உள்ளே வாரும்! மணி 11க்கு மேலாய் விட்டதால், நீர் வரமாட்டீரென்று நினைத்தேன்.” என்றழைக்க மூர்த்தி அவரை யுற்றுநோக்கியவண்ணம் உள்ளே நுழைந்தான். உடனே கதவு உட்பக்கம் தாளிடப்பட்டது.

கதவு திறந்தவரை நல்லவெளிச்சத்தில் பார்த்ததும், மூர்த்திக்குண்டான ஆச்சர்யத்திற்களவில்லை. அவர், பார்ப்பதற்கு ஒரு சாமியாரைப்போல் காணப்பட்டார். கரேலென்றிருந்த அவருடைய தாடி அவருடைய இடுப்புவரையில் தொங்கிக்கொண்டிருந்தது. சடை சடையாயிருந்த தம் தலைமயிரை, முறுக்கிக் கொண்டைபோட்டிருந்தார். அவருடைய காஷாயவஸ்திரத்தினால் மூடப்படாத பாக்கியிடங்களில், விபூதியை வாரித் தாராளமாய்ப் பூசிக்கொண்டிருந்தார். ஆனால், அவருடைய சரீரக்கட்டை நோக்குமிடத்து, அவருக்கு வயது முப்பதுக்குள்ளாகவே யிருக்கும்போற் றோன்றியது. இன்னும் அவருடைய முகத்தோற்றத்திலிருந்து அவர், யோக்கியரா அல்லது அயோக்கியராவென்பதைச் சற்றும் அறியக்கூடவில்லை. சாதாரணமாய், ஒரு மனிதனுடைய குணாதிசயங்களையும், அவன் மனதிலிருக்கக்கூடிய எண்ணங்களையும், அவனுடைய கண்களின் பார்வையிலிருந்து கண்டுபிடிக்க முடியுமென்று சொல்லுவ

துண்டு. ஆனால் நம் சாமியார், ஒருவித விசித்திரமான மூக்குக்கண்ணாடியைப் போட்டுக்கொண்டிருந்ததால், அவருடைய மர்மம் சிறிதும் வெளியாகவில்லை.

கடைசியில் அவர், ஒரு அறைக்குள் நுழைந்து, அங்குத் தென்பட்ட இரு நாற்காலிகளிலொன்றில் உட்கார்ந்துகொண்டு மரியாதையுடன், மூர்த்தியை மற்றொன்றில் அமர்ந்துகொள்ளும்படி சொல்ல, மூர்த்தியும் அப்படியே செய்தான். மூர்த்தியின் ஆச்சர்யம் வர வர அதிகரித்துக்கொண்டே வந்தது. அவன் தான் சற்றும் பயப்படாதவன்போலும், தன்னைச் சாமியார் அவ்விதம் சந்திக்கும்படி எழுதியதின் காரணத்தை அறியாதவன்போலும், பாசாங்குசெய்ய நிச்சயித்திருந்தானாகையால் மிகவும் வியப்புற்றவன்போலவே காணப்பட்டான்.

சாமியார், அவனையொருதரம் ஏற இறங்கக் கவனித்தார். பிறகு, தம் தாடியைத் தடவிக்கொண்டே,

"ஐயா! நீர் என் கடிதத்தைப் பார்த்ததும் மிகவும் பயந்திருக்கக்கூடும்!" என்றார்.

"வாஸ்தவம், இன்னும் அதை வாசித்ததும், நான் அதை எழுதியவன் எப்பேர்ப்பட்ட அயோக்கியனாயிருக்க வேண்டுமென்று நினைத்தேனோ, அப்பேர்ப்பட்ட அயோக்கியனாய் நீரிருக்கமுடியாதென்பதை உம்மைப் பார்த்ததும் கண்டுகொண்டேன்." என்று மூர்த்தி விடையளித்தான்.

"பேஷ்! நீர் சொல்லுவதைக் கேட்க மிகவும் சந்தோஷப்படுகிறேன். இன்னும், நான் உம்மை எவ்விதத்திலும் கெடுக்க எண்ணங்கொள்ளவில்லையென்பதை இப்பொழுதே சத்தியம் செய்துகொடுக்கிறேன்." என்று சாமியார் உறுதியுடன் கூறவே, மூர்த்தி,

"ஐயா! நீரென்னைக் கெடுக்கக்கூடுமென்பதை இதுவரையில் நான் எதிர்பார்க்கவில்லை. நீர் என்னை அழைத்ததின் காரணத்தை உடனேசொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்." என்றான். சாமியார்,



"என்ன? ஆனால் நான் உம்மை அழைத்ததின் காரணம், உமக்குத் தெரியாதோ?" என்று ஆச்சர்யப்பட்டவர்போல் வினவினார். மூர்த்தி, தெரியாதென்று தன் தலையையாட்டச் சாமியார், "ஓய்! நீர் என்னை ஏமாற்றப் பிரயத்தனப்படுவதில் எள்ளளவும் பிரயோஜனமில்லை. நீர் நேற்று இரவு என்னகார்யம் செய்தீரென்பது எனக்கு நன்றாய்த் தெரியும்." என்று உறுதியாகக் கூறினார்.

மூர்த்தி:— "ஐயா! நீர் பேசுவது எனக்கு விளங்கவில்லை. நான் நேற்று இரவு செய்ததென்ன?"

சாமியார்:— "பேஷ்! பேஷ்! ஸ்வாமி! நீர் இப்படி நடிப்பீரென்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சரி, இருக்கட்டும்! நேற்று உம் தந்தை கொலைசெய்யப்பட்டாரென்பது எனக்குத் தெரியும்."

மூர்த்தி:— "இதை நீர் அறிந்தது ஆச்சர்யப்படத்தக்கதல்ல. ஏனென்றால், இவ்வூர் முழுமையும் தற்சமயம் அதே பேச்சாயிருக்கிறது."

சாமியார்:— "வாஸ்தவம்! ஆனால் இவ்வூரில் எல்லோருக்கும் உம் தந்தை கொலைசெய்யப்பட்டார் என்பதுமட்டும் தெரியுமேயொழிய அவரைக் கொலைசெய்தது யாரென்பது ஒருவருக்கும் தெரியாது."

மூர்த்தி:— "என்ன? என்ன சொன்னீர்? ஆனால் உமக்கு, அவரைக் கொன்றது யாரென்பது தெரியுமோ? ஐயா! அப்படியானால், அச்சண்டாளனுடைய பெயரை உடனே சொல்லும்!"

சாமியார்:— "ஆஹா! ஓய்! நீர் இப்படி என் கண்களில் மண்ணைப்போட எத்தனிப்பதைக் காண, எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது! தூ! சண்டாளா! அவரைக் கொன்ற பாபி நீயேயொழிய வேறல்ல."

இதைக்கேட்டதும், மூர்த்தி திடுக்கிட்டானென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. திடீரென்று, தன் மண்டை

மேல் ஓங்கி அடிக்கப்பட்டவன்போல் காணப்பட்டான். முகம் வெளுக்க, கைகால்கள் நடுங்கப் பிரமித்துக் கொஞ்ச நேரமுட்கார்ந்துகொண்டிருந்தான். பிறகு தன் பீதியையும் குழப்பத்தையும் மறைத்துக்கொண்டு, அவைகளைக் கோபமாய் மாற்றி,

“ஒய்! நீர் பைத்தியமென்றே நினைக்கிறேன். நீர் பார்ப்பதற்குச் சாமியாரைப்போலில்லாமலிருக்கும்பக்ஷத்தில், நீரிப்படிப் பேசியதற்கு, உம் மண்டையை உடைத்திருப்பேன்.” என்று கர்ஜித்தான்.

ஆனால், அவனுடைய கோபத்தைக் கண்டு சாமியார், கலகலவென்று நகைத்தாரேயொழியச் சற்றும் பயந்தவராய்த் தோன்றவில்லை. அவர் வியக்கத்தக்க சாந்தத்துடன்,

“டேய்! தற்சமயம், நீ என் மண்டையை உடைக்க ஆசைப்படுவது எதிர்பார்க்கத்தக்கதே! ஆனால், நீ அப்படிச் செய்ய முடியாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. நீ என்மேல் விரலை வைக்கும்பக்ஷத்தில் உன்கதியென்னவாகுமென்பதை, இவ்வறையின் நாலாபக்கங்களையும், முதலில் ஒருதரம் கவனித்துவிட்டு மேலே பேசு.” என்று சொல்ல, மூர்த்தி அப்படியே செய்தபொழுது, அவ்வறையின் ஒவ்வொரு மூலையிலும் பார்க்குமளவில், நடுங்கத்தக்க முகத்தோற்றத்துடன், முரட்டு மனிதனொருவன் கையில் பெருந்தடியொன்றைப் பயங்கரமாய்ப் பிடித்தவண்ணம், நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். இனித் தான் தப்ப வழியில்லையென்பதையுணர்ந்து வாய்குளற,

“ஐயா! நான் உம்மிடம் சிக்கிக்கொண்டேன் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.” என்றான். சாமியார்,

“டேய்! நான் உன்னை வீணாய்ப் பயமுறுத்துகிறேனென்று எண்ணவேண்டாம். நேற்று இரவு நீ உன் தந்தை கொலைசெய்யப்பட்ட வீட்டிலிருந்து வெளியே வரும்பொழுது நான் கண்டதுமன்றித் தற்சமயம், போலீஸார் வசமிருக்கும், அக் கைக்குட்டை உன்னுடையதென்பது



எனக்கு நன்றாய்த் தெரியும். நீ நேற்று மாலை அதைக் கடைத்தெரு ராமராவ் கம்பெனியில் வாங்கினாயென்பதை என்னால் ருபிக்கமுடியும். எல்லாம்போக, நான் இதோ உன்னிடம் காண்பிக்கப்போகும் சாமான்களைக் கண்டதும் நான் சொன்னதை மறுத்துப் பேசமாட்டாயென்று நம்புகிறேன்.” என்று சொல்லிக்கொண்டே, தன்னிடத்தை விட்டெழுந்து, ஒரு மூலையிற்கிடந்த ஒரு மூட்டையை எடுத்து அதிலிருந்து ஒரு விலையுயர்ந்த சேலம் வேஷ்டியையும், ஒரு ஸில்க் ஷர்டையும் அவனிடம் காண்பித்தார்.

அவைகளில் ரத்தக்கறைகள் எதேஷ்டமாய்க் காணப்பட்டன.

* * * * *

தன் தந்தை இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதும், தாண்டவம்ஐயருடைய புதல்வி ஜானகி மூர்ச்சித்து விழுந்ததும், சபேசன் தன் தங்கை ராஜத்தை வரவழைத்து, அவளுடனிருக்கும்படி சொன்னதை நம் நேயர்களறிவார்கள். ராஜம், இன்னும் அவ்வீட்டிலேயே தன் தோழியுடனிருந்துவந்தாள். ஆனால் சபேசன் மட்டும், தன் தோழனாகிய பாலகிருஷ்ணன் வீட்டிற் சாப்பிடுவதும், அடிக்கடி வந்து ராஜேந்திரனைக் காணுவதுமாயிருந்தான்.

சபேசன் பல விதத்திலும் யோசித்தும், மூர்த்திக்கும், அன்று இரவு அவன் கண்ட சாமியாருக்கும் என்ன சம்மந்தமிருக்கக் கூடுமென்பது அவனுக்குத் தெரியவில்லை. எனவே, எப்படியிருந்தபோதிலும், சாமியாரையும் கவனித்துக்கொள்ளவேண்டியது அவசியமென்று தீர்மானித்தான்.

மூர்த்தி, தன் தம்பி ராஜேந்திரன் எவ்வளவோ வேண்டிக்கொண்டும், வைதீகக் காரியங்களைச் செய்வதற்கு மட்டும் அவ்வீட்டிற்கு வருவதும், அது முடிந்தவுடன், தன் வீட்டிற்குப் போய்விடுவதுமாயிருந்தான். சபேசன், அவன் சந்தேகிக்க வழியின்றி, அவன் செய்யுங்காரியங்களையும், போகுமிடங்களையும், கவனிக்க ஏற்பாடு செய்திருந்தான்.

கொலை நடந்த எட்டாவது நாள் சபேசன், ராஜேந்திரனுடைய வீட்டிற்குச் சென்றபொழுது, தாண்டவமையருடைய ஆப்த சினேகிதராகிய, வக்கீல் சீதாராமய்யர் என்ற ஒருவர், தன் தோழனுடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டான். ராஜேந்திரன் துக்கம் பொறுக்கமுடியாமல், சிறு குழந்தைபோல் விசித்து விசித்து அழுவதைக் கண்டு அவ்வக்கீல், அவனுக்குப் பலவிதத் தேறுதல்களைச் சொல்லி,

"அப்பா! ராஜேந்திரா! நீ இப்படிக் குழம்புவது பிசகு. உத்தம குணசீலராகிய உன் தந்தை கொடூரமாய்க் கொலைசெய்யப்பட்டிருப்பதால், அவரை இவ்விதம் அநியாயமாய்க் கொன்ற சண்டாளனைக் கண்டுபிடித்து, இதற்குள்ள தண்டனைக்கு அவனையுள்ளாக்குவதே, தற்சமயம் உன்னுடைய கடமை." என்றார். ராஜேந்திரன் சற்றுச் சமாதானமடைந்து,

"ஐயா! அப்பாதகனைக் கண்டுபிடிக்க எவ்வளவு செலவானபோதிலும் பாதகமில்லையென்று நான் போலீஸாரிடம் சொல்லியிருக்கிறேன். அவர்கள் சீக்கிரம் அச்சண்டாளனைக் கண்டுபிடித்துவிடுவார்களென்று நம்புகிறேன்!" என்று சொல்லிக்கொண்டே, திரும்பிப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சபேசனைக் காண்பித்து, "இன்னும், என் நண்பனாகிய இவன், அப்பாவியைக் கண்டுபிடித்துவிட்டுத்தான் மறு காரியம் செய்வதென்று சபதம் செய்துகொண்டிருக்கிறான்." என்று கூறினான்.

சீதாராமய்யர், ஆச்சர்யப்பட்டவராய், சபேசனை உற்று நோக்கினார். அவனுடைய கண்களின் பிரகாசத்தையும், தீர்மானத்தையும் கண்டதும்,

"பேஷ்! அப்படியா? இவனைப் பார்க்கும்பொழுதே இப்பேர்ப்பட்ட காரியத்தைச் செய்யத் திறமையுள்ளவன் போல் தோன்றுகிறது! இன்னும், இவ்விஷயங்களில், நாம் போலீஸாரை, முழுமையும் நம்புவதிற் பிரயோஜனமில்லை. சரி; இருக்கட்டும்!" என்று சபேசனைப் பார்த்து



வரையில் நீ கண்டுபிடித்தது ஏதேனுமுண்டோ?" என்று வினவினார்.

ஆனால், சபேசன் தயங்குவதைக் கண்டதும், சிரித்துக்கொண்டே,

"அப்பா! நானிவ்விதம் கேட்டதற்கு என்னை மன்னித்துவிடு. சாதாரணமாய்த் துப்பறியும் காரியத்தைக் கைக்கொண்டவர்கள், தாங்கள் கண்டுபிடித்த விஷயங்களைப் பிறரை நம்பிச் சொல்ல இஷ்டப்படமாட்டார்கள். இக்காரியத்தில் நீ ஜயமடைய, ஈசன் அனுக்கிரகிக்கவேண்டுமாறு பிரார்த்திக்கிறேன்." என்றார். சபேசன், மரியாதையுடன்,

"ஸ்வாமி! நீங்கள் சொன்னது வாஸ்தவம். ஆனால், தற்சமயம் நான் கண்டுபிடித்திருக்கும் விஷயங்களை உங்களிடம் சொல்லத் தயங்குவதற்குக் காரணம் எனக்கு உங்கள்மீதுள்ள அவநம்பிக்கை—" என்று அவன் மேலே பேசுமுன், சீதாராமய்யர்,

"அது எப்படியிருந்தாலும் பாதகமில்லை, ஆனால் நீ பேசுவதிலிருந்து இதற்குள் ஏதோ கண்டுபிடித்திருக்கிறாயென்பது வெளியாவதால் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இருக்கட்டும்! மேலாகவேண்டியதைக் கவனிப்போம்." என்றார். பிறகு சுமார் ஒருமணி நேரம் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன் முடிவில் சீதாராமய்யர் எதையோ நினைத்துக்கொண்டவர்போல், ராஜேந்திரனைப் பார்த்து, "அப்பா! உன் தந்தை உயில் எழுதி வைத்திருக்கிறாரோ?" என்று வினவ, ராஜேந்திரன்,

"எனக்குத் தெரிந்து அவர் எழுதிவைக்கவில்லை." என்றான்.

அச்சமயம், அப்பக்கமாய்ப் போய்க்கொண்டிருந்த அவ்வீட்டு வேலைக்காரன் குமாரவேல் 'உயில்' என்ற வார்த்தையைக் கேட்டதும், அப்படியே நடப்பதை நிறுத்தி, ராஜேந்திரனையுற்றுநோக்கியவண்ணம் நின்றான். அதைக் கண்ட ராஜேந்திரன்,

"ஏண்டா? என்ன வேண்டும்?" என்று கேட்கக் குமரவேல்,

"ஸ்வாமி! பெரிய யஜமான், உயில் எழுதி வைத்திருக்கிறார். நான் இது வரையில் உங்களிடம் சொல்ல மறந்துவிட்டேன்." என்றான்.

"என்ன? அது எப்படி உனக்குத் தெரியும்? எப்பொழுது அது எழுதப்பட்டது?" என்று ராஜேந்திரன் அவசரத்துடன் வினவ, அவ்வேலைக்காரன், மரியாதையுடன்,

"நான் இவ்விஷயத்தை எப்படி அறிந்துகொண்டேனென்பதைக் கேட்க, ஒருகால் நீங்கள் என்மீது கோபிக்கலாம். ஆனால் அதைப்பற்றி யோசிக்க இப்பொழுது நேரமில்லை. சில நாட்களுக்கு முன்பு, நீங்களும், உங்கள் தங்கையும், பிரயாணத்தில், உங்கள் மாமன் வீட்டில் நடந்த ஒரு விவாகத்திற்குப் போயிருந்ததை மறந்திருக்கமாட்டீர்கள். அச்சமயம், ஒரு நாள் இரவு சுமார் 11 மணிக்கு, பெரிய யஜமான் வீட்டிற்குத் திரும்பியபொழுது, அவர் முகம் வெளுத்து, மிகவும் பயந்தவர்போல் காணப்பட்டார். அவருடைய சரீரம் முழுமையும் நடுங்கிக்கொண்டிருந்தது. உள்ளே வந்ததும், என்னை யழைத்து, தன் நண்பர்களில் இருவரை உடனே அழைத்துவரும்படி கட்டளையிட்டார். நான், அவர் சொன்ன அந்த இரண்டு மனிதர்களையும், ஒருமணி நேரத்திற்குள் அழைத்துவர, மூவரும், மாடிக்குப் போய்விட்டார்கள். நான் ஒன்றும் தெரியாமல், அவருக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டிருக்குமெனப் பயந்து, அவர்களுக்குள் நடக்கும் சம்பாஷணையை யுற்றுக்கேட்டு, விஷயத்தை யறிந்துகொள்ளத் தீர்மானித்தேன். ஆனால், நானப்படிச் செய்ததற்குக் காரணம், எனக்கு அவரிடமுள்ள ஒரு பிரியமும், கவலையுமே என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. பிறகு அவர்கள் பேசியதிலிருந்து, நான் தெரிந்துகொண்டதாவது— பெரிய யஜமான் ஒவ்வொரு நிமிஷமும் தம் உயிருக்கே ஆபத்து வரக்கூடும் என்று பயந்தாரென்பதும், அதன் பொருட்டுச் சற்றும் தாமதமின்றி ஓர் உயில் எழுத நிச்சயித்தாரென்பதுமே.



ஆனால் அவர்களுடைய சம்பாஷணையை நான் முழுமையும் கேட்கவில்லை. பிறகு, வந்திருந்த அவர் தோழர்களிருவரும், இவ்வீட்டைவிட்டுப் போகும்பொழுது, அவர்களைத் தாமவ்விதம், உயில் எழுதிவைத்திருப்பதையும், அதற்கு அவ்விருவரும் சாக்ஷி போட்டிருப்பதையும் வெளியிடாமலிருக்கும்படி கேட்டுக்கொண்டார்." என்று சொல்லவே, அங்கிருந்தவர்களுக்குண்டான ஆச்சர்யத்திற்களவில்லை.

வக்கில் சீதாராமய்யர், "இவன் சொல்லுவதிலிருந்து, உன் தந்தை தமக்கிவ்வித ஆபத்து நேரிடுமென்பதை எதிர்பார்த்தாரென்றே தோன்றுகிறது." என்று, திரும்பி ராஜேந்திரனை நோக்கி, "வா! வா!! போய், உயில் என்ன எழுதி வைத்திருக்கிறாரென்று பார்ப்போம்." என்று அழைக்க, ராஜேந்திரன், மரியாதையுடன்,

"தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். தற்சமயம், என் தந்தை இறந்துவிட்டதால், இவ்வீட்டிலுள்ள ஒவ்வொரு சாமானும், எனக்கும், என் தமயனுக்கும் பொதுவானது. என் தந்தை அவ்வுயிலைத் தன்னறையிலிருக்கும், பெரிய இரும்புப்பெட்டியில்தான் வைத்திருப்பார். அதே பெட்டியில் எங்கள் வீட்டு நகைகளும், இன்னும், விலையுயர்ந்த இதர சாமான்களுமிருப்பதால், என் தமையனில்லாத சமயத்தில் நாம் அதைத் திறப்பது பிசகு." என்றான். சீதாராமய்யர்,

"ராஜேந்திரா! நீ சொல்லுவது நியாயமே. ஆஹா! இதோ மூர்த்தியும் வந்துவிட்டான்." என்றார்.

அச்சமயம், மூர்த்தி அவ்வறைக்குள் நுழைய, சீதாராமய்யர், அவனையும் மரியாதைக்குத் துக்கம் விசாரித்துவிட்டு, "அப்பா மூர்த்தி! உன் தந்தை உயில் எழுதிவைத்திருக்கிறாராம்—" என்று சொன்னதும், மூர்த்தி திடுக்கிட்டான். ஆனால், மறுநிமிஷம் மிகவும் அமைதியுடன்,

"அப்படியா? அஃதெங்கே?" என்று ஆவலுடன் வினவினான். சீதாராமய்யர்,

"அது அவருடைய பெட்டியிலிருக்குமென்று உன் தம்பி சொல்லுகிறான். நீ இஷ்டப்பட்டால் உடனே போய்ப் பார்க்கலாம்." என்றார்.

"வாருங்கள் போய்ப் பார்ப்போம்." என்று மூர்த்தி அழைக்க, எல்லோரும் மாடிக்குச் சென்றார்கள். தாண்டவம்ஐயருடைய அறைக்குள் நுழைந்ததும், மூர்த்தி பக்கத்தில் சபேசன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும், வெறுப்புடன் அவனை நோக்கியவண்ணம்,

"ராஜேந்திரா! இச்சமயம், அந்நியர்கள் இங்கிருப்பதில் எனக்கிஷ்டமில்லை." என்றான்.

இதைக் கேட்டதும், ராஜேந்திரனுக்குண்டான வருத்தத்திற்களவில்லை. ஆனால், மரியாதையுடன், அவன்,

"அண்ணா! நீ இப்படிப் பேசுவது சரியன்று. இன்னும், நம் தந்தைக்கு அவன்மீதுள்ள பிரியத்தையும், மரியாதையையும் நீ அறிந்தும், இவ்விதம் பேசியது ஆச்சரியமாயிருக்கிறது." என்றான்.

"வாஸ்தவம்! நம் தந்தைக்கு இவன்மேல் பிரியமும் மரியாதையும் இருந்திருக்கலாம். ஆனால் தற்சமயம் அவர் இறந்துவிட்டதால், இனி, இவனுக்கு இங்கு வேலை இல்லை என்றே நினைக்கிறேன்." என்று மூர்த்தி அகம்பாவத்துடன் கூறவே, ராஜேந்திரன்,

"அண்ணா! நம் தந்தை இறந்துவிட்டதால், இவ்வீட்டிற்கு இப்பொழுது நீயே யஜமானன் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இன்னும், நீ செய்யக்கூடிய எக்காரியத்திலும், நான் ஆக்ஷேபிக்கப்போவதில்லை. ஆனால், இதோ நிற்கும் சபேசனை, நான் என் கூடப்பிறந்த சகோதரனென்றே நினைத்துக்கொண்டிருப்பதால், அவன் என்னுடனிருப்பதையும், நான் சம்பந்தப்பட்ட காரியங்களில் அவன் பிரவேசிப்பதையும் தடுக்காமலிருக்கும்படி உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன்." என்றான். மூர்த்தி



"சரி! சரி! இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்க எனக்கிஷ்டமில்லை." என்று அலக்ஷ்யத்துடன் கூறிவிட்டு, ஒரு மூலையிலிருந்த, ஒரு பெரிய இரும்புப்பெட்டியைக் காண்பித்து, "அதன் சாவி எங்கே?" என்று கேட்க, ராஜேந்திரன்,

"அது நம் தந்தை வழக்கமாய் வைக்குமிடத்திலிருக்கும்." என்று சொல்லிக்கொண்டே, தாண்டவம்ஐயருடைய மேஜையிலிருந்து, சாவி ஒன்றை எடுத்துத் தன் தமையனிடம் கொடுத்தான்.

மூர்த்தி, ஆவலுடன்; அப் பெட்டியைத் திறந்துகொண்டே, ஏதோ சந்தேகித்தவன்போல், தன் தம்பியைப் பார்த்து, "ஏண்டா? நம் தந்தை இறந்தபிறகு, இது திறக்கப்பட்டதோ?" என்று வினவ, ராஜேந்திரன், 'கண்டிப்பாய் இல்லை' என்று விடையளித்தான்.

பிறகு, சுமார் அரைமணி நேரம் வரையில், மூர்த்தி அப் பெட்டி முழுமையும் தேடியும், அவர்கள் எதிர்பார்த்த உயில் அகப்படவில்லை. அதன் முடிவில், ராஜேந்திரன்,

"அண்ணா! ஒருகால், அது, அதோவிருக்கும், அந்நகைப் பெட்டிகளொன்றில் இருக்கும்." என்று சொல்ல, மூர்த்தி, தந்தத்தினால் செய்யப்பட்ட, இரு அழகிய பெட்டிகளை எடுத்துத் தரையில் வைத்தான். அவைகளில் ஒன்றின்மேல், தாண்டவம்ஐயருடைய மனைவியின் பெயரும், மற்றொன்றில், ஜானகியின் பெயரும் எழுதப்பட்டிருந்தது.

மூர்த்தி, அவசரத்துடன், முதல் பெட்டியைத் திறந்ததும், திடுக்கிட்டான். அது காலியாயிருந்தது; முகத்தைச் சுளுக்கிக்கொண்டு, மற்றொன்றையும் திறந்தான். அதிலும் நகைகளொன்றும் காணப்படவில்லை. ஆனால், அதில் இரண்டு கடிதங்களிருந்தன. அதில் ஒன்றில், அவ்விரு பெட்டிகளிலுமிருந்த நகைகளின் பெயரும், அவைகளுடைய விலையும் எழுதப்பட்டிருந்தது. அதிலிருந்து தற்சமயம் காணாமற்போன, நகைகளின் மதிப்பு 30 ஆயிரத்துக்குமேலிருக்குமென்று வெளியாயிற்று.

மூர்த்தி, அவசரத்துடன், மற்றொரு கடிதத்தையும் பிரித்து வாசித்தான். உடனே, அவனுடைய முகம் மாறியது. பிறகு, அக் கடிதத்தை அப்படியே கசக்கினான். மறு நிமிஷம், அதைச் சுக்குச் சுக்காய்க் கிழித்திருப்பான். ஆனால், அச்சமயம், அவனையே உற்றுநோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்த சபேசன் அவன்மேல் புலிபோல் பாய்ந்து, அதைப் பிடுங்கிக்கொண்டான்.

அது, அதுவரையில் அவர்கள் தேடிக்கொண்டிருந்த, உயிலேயொழிய வேறல்ல.

---

## அத்தியாயம் 8.

---

தாண்டவம்ஐயர் எழுதிவைத்திருந்த உயிலின் பிரகாரம், அவருடைய சொத்து முழுமையும் இரு சமபாகங்களாகப் பிரிக்கப்பட்டு, அதில் ஒன்று ராஜேந்திரனுக்கும், மற்றொன்று, அவருடைய புதல்வி ஜானகிக்கும் வைக்கப்பட்டிருந்தது. அதில் அவருடைய மூத்தபிள்ளையாகிய மூர்த்தியின் பெயரே காணப்படவில்லை. இன்னும் அதற்கு, அவ்வூர் ஐயன்குளத்தெருவில் வசிக்கும், நாராயணஸாமி அய்யர் குமாரர், ஸ்ரீநிவாஸய்யரும், மடத்துத்தெருவில் வசிக்கும், நாகராஜய்யர் குமாரர், வக்கீல் சிவராமய்யரும், சாக்ஷிக்கையொப்பம் வைத்திருந்தார்கள். ஆனால் முதற் சாக்ஷியாகிய ஸ்ரீநிவாஸய்யர், அவ்வுயில் எழுதப்பட்ட சமயத்திற்கும், நாம் சொல்லும் சமயத்திற்கும் இடையில் மரித்துவிட்டார்.

நிற்க, மூர்த்தியைக் கவனிப்போம். நாம் சொன்னவிதம், சபேசன் அவனிடமிருந்த உயிலைத் தன் வசப்படுத்திக்கொள்ளவே, அவனுக்குண்டான கோபத்திற்களவில்லை. தன் கண்களிலிருந்து அக்கினிஜ்வாலை வீச, சபேசனை அப்படியே எரித்துவிட நினைத்தவன்போல், கொஞ்சநேரம் அவனை உற்றுநோக்கியவண்ணமிருந்தான். பிறகு திரும்பி,



தன் தம்பி ராஜேந்திரனை ஒருதரம் கடுமையான பார்வையுடன் கவனித்துவிட்டு, ஒன்றும் பேசாமல், மடமடவென்று அவ்வறையைவிட்டு வெளியே சென்றான். ஆனால் ராஜேந்திரன் அவனைப் பின்பற்றி ஓடி, அவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு,

"அண்ணா! இதற்காக நீ எள்ளளவும் கவலைப்பட வேண்டாம். கோபத்தின் பலனாய் நம் தந்தை இப்பேர்ப்பட்ட உயில் எழுதிவைத்தபோதிலும்—" என்று அவன் பேசிக்கொண்டே இருக்கையில், மூர்த்தி, வெறுப்புடன் அவன் கரங்களைப் பிடித்துத் தள்ளிவிட்டுக் கோபத்துடன்,

"சிச்சி! வாயைமூடு. ஏதோ எனக்குப் பிச்சைகொடுப்பவன்போல் பேசுகிறாய்." என்று சீறினான். பிறகு, "இருக்கட்டும்! இருக்கட்டும்!" என்று உறுமிக்கொண்டே, போய்விட்டான்.

ராஜேந்திரன், வருத்தத்துடன், மறுபடியும் தன் நண்பனிடம் சென்று, கவலையுடன்,

"சபேசா! எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லையே," என்று மனங்குழம்ப, சபேசன்,

"நீ எதற்கும் கவலைப்படாதே. உன் தமையனுடைய பார்வையிலிருந்தே; அவன் உன்னைச் சந்தேகிக்கிறானென்றும், இன்னும், இதில் ஏதோ விஷமம்பண்ண நினைக்கிறானென்றும் தோன்றுகிறது." என்றான்.

"அவன் எதற்காக விஷமம் செய்யவேண்டும்? நான் அவனுக்குள்ள சொத்தைக் கொடுக்கத் தயார். அது இருக்கட்டும். அந்நகைகள் போனவிடமெங்கே?" என்று ராஜேந்திரன் வினவ, சபேசன்,

"அதைப்பற்றி எனக்கும் மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. முதலில், நான் மூர்த்தியின்மேல் சந்தேகப்பட்டேன். ஆனால், இப்பொழுது, அவைகளை அவன் எடுக்கவில்லை என்பது நிச்சயம். ஏனென்றால், அப்பெட்டிகளில் ஒன்றிலேயே, இவ்வுயிலுமிருந்திருப்பதால், அவன் அவை

களை எடுத்திருக்கும்பக்ஷத்தில், உயிலையும் பார்த்து, அதை உடனே கிழித்து எறிந்திருப்பான். இதில் இதுவரையில் நாம் எதிர்பார்க்காத பல மர்மங்களிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. சரி இருக்கட்டும். நான் போய்விட்டுப் பிறகு வருகிறேன். எனக்கு உன் தந்தையின் பெட்டியிலிருக்கக்கூடிய கடிதங்களையும் மற்ற எல்லாச் சாமான்களையும் சோதித்துப் பார்க்கவேண்டும். ஒருகால் அவைகளிலிருந்து ஏதேனும் உளவு அகப்படக்கூடும்.'' என்று சொல்லிக்கொண்டிருக்கையில், அதுவரையில் ஜானகியுடன் பேசிக்கொண்டிருந்த, வக்கில் சீதாராமய்யர், அங்கு வந்து,

“அப்பா ராஜேந்திரா! எனக்கு ஆதியிலிருந்தே உன் தந்தை இப்பேர்ப்பட்ட உயில் எழுதுவாரென்பது நன்றாய்த் தெரியும். அவர் பலதரம் என்னிடம் உன் தமையனைப்பற்றி மிகவும் வெறுப்புடன் பேசியிருக்கிறார். நான் தனியாக அவருடன் பேசியபொழுது, ‘நான் உயிருடனிருக்கும்வரையில், கடன் என்று நினைத்து, அவனுக்குப் பணம் கொடுப்பேன். ஆனால் என் உயிலில் அவனுக்கு ஒரு தம்பிடிகூட எழுதிவைக்கமாட்டேன்.’ என்று உறுதியுடன் கூறினார். இப்பொழுது, உன் தமையன் ஏதோ வம்பு செய்யத் தீர்மானித்திருக்கிறானென்பதில் ஐயமில்லை. போதாக் குறைக்கு, உயிலில் சாக்ஷி போட்டிருக்கும் இருவர்களில் ஒருவர் ஏற்கனவே இறந்துவிட்டார். எனவே, நாம் தாமதமின்றி அம் மற்றொரு சாக்ஷியை வரவழைத்து, அவருடன் இதைப்பற்றிப் பேசவேண்டியது மிகவும் அவசியம். நீ அவரை இன்று மாலை வந்து உன்னைக் காணும்படி ஒரு கடிதமெழுதி அனுப்பு.'' என்று சொல்லிவிட்டுத் தானும், மாலை 6 மணிக்குள், மறுபடியும் வருவதாகச் சொல்லி விடைபெற்றுச் சென்றார்.

தாண்டவம்ஐயருடைய உயிலில் சாக்ஷிபோட்டிருந்த இருவர்களில் உயிருடனிருந்த சிவராமய்யரைப்பற்றி இங்குக் கொஞ்சம் சொல்லுவது அதிகமாகாது. அவருக்கு வக்கில் உத்தியோகமென்பது நம் நேயர்களறிந்த விஷ



யம். ஆனால், தற்சமயம், அவர் அதிலிருந்து ஒவ்வொரு மாதமும் அடைந்துவந்த வருமானம் ரூ 50 கடனே. அவருக்குப் பூர்விக ஐஸ்வர்யம் கொஞ்சமுண்டாகையால், அதிலிருந்து வரக்கூடியதை வைத்துக்கொண்டும், இன்னும் முடிந்தவரையில் அதன்மேல் கடன்வாங்கியும், தம் காலத்தைக் கழித்துவந்தார். எனவே, நாம் சொல்லும் சமயம், அவருடைய ஸ்திதி மிகவும் பரிதாபப்படத்தக்கதாயிருந்தது. மேலும், கெட்ட குடியே கெடும் என்பதற்கொப்ப, அவருடைய மனைவி வருஷந்தவறாமல் ஒரு பெண் குழந்தை பெற்று வந்தாள். அச்சமயம் அவருக்கிருந்த ஆறு பெண்களில் மூத்தவளுக்கு ஏற்கனவே 14வயது நிரம்பிவிட்டது. சுருக்கிச்சொல்லுமிடத்து, மனுஷ்யன் நாலாவழிகளிலும் கஷ்டமடைந்து என்ன செய்வோமென்று திணறிக்கொண்டிருந்தார். இனி நம் கதையை கவனிப்போம்.

தாண்டவம்ஐயர் எழுதிவைத்திருந்த உயில் அகப்பட்ட தினம், பிற்பகல் சுமார் 2 மணியிருக்கும். வக்கில் சிவராமய்யர் தம் அறையில் சிந்தாசாகரத்திலாழ்ந்தவராய் உட்கார்ந்துகொண்டிருந்தார். அச்சமயம் அவருடைய குமாஸ்தா கிருஷ்ணய்யர் அங்குவர, வெறுப்புடன் “என்ன வேண்டும்?'' என்று வினவினார். கிருஷ்ணய்யர், தாழ்ந்த குரலில், மரியாதையுடன்,

“தயவுசெய்து மன்னிக்கவேண்டும். நான் உங்களிடம் வேலைக்குவந்து 5 மாதங்களுக்கு மேலாயும், இன்னும் ஒரு சம்பளங்கூட வாங்கவில்லையாகையால், நாளையிலிருந்து வேலைக்கு வரமுடியாது.'' என்று விடையளித்தார்.

வக்கில்:— “பேஷ்! நல்லகாரியம் செய்தீர். கிருஷ்ணய்யரே! நீர் நம்புவீரானால், இப்பொழுது நீர் உள்ளே நுழைந்தபொழுது, உம்மை எப்படி என்னிடமிருந்து போகச்சொல்லுவது என்று தெரியாமல் தயங்கிக்கொண்டிருந்தேன். சரி; சென்ற 5 மாதகாலமாய் நீர் ஒரு சம்பளங்கூட வாங்கவில்லையென்று வருத்தப்படுகிறீர். ஆனால், இவ்வளவு காலமாய் நீர் இங்கு

செய்த வேலை என்னவென்பதை யோசிக்கவில்லை. வாஸ்தவம்! நாள் தவறாமல், நீர் வந்து என் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொள்ளுகிறீர். அதற்காக வரவது ஏதேனும் கொடுக்கவேண்டியது நியாயமே. ஆனால், உமக்கு முன் என்னிடமிருந்தவருக்கு நான் கொடுக்கவேண்டியதைக் கொடுத்துவிட்டல்லவோ, உமக்குச் சேரவேண்டியதைக் கொடுக்கமுடியும்."

குமாஸ்தா:—"ஐயா! நான் உம்மைப் பணம் கேட்கவில்லை. எனக்குப் போக அநுமதி கொடுத்தால் போதும்."

வக்கில்:—"அப்படியா? தாராளமாய்ப் போம். ஆனால் உம் பணத்தைப்பற்றிக் கவலைப்படாதேயும். எப்படியும் கொடுத்துவிடுவேன்."

குமாஸ்தா:—"அதைப்பற்றி எனக்குச் சந்தேகமேயில்லை. சரி; போய்வருகிறேன். உமக்கு அனந்தகோடி நமஸ்காரம்."

வக்கில்:—"உம்மைத்தெய்வம் ரக்ஷிக்கட்டும்."

குமாஸ்தா கிருஷ்ணய்யர் வெளியே சென்றதும், நம் வக்கிலின் ஸம்ஸாரம் உள்ளே நுழைந்தாள். அவள் கோபத்துடன் "என்னா? மணி இரண்டுக்கு மேலாகிறதே." என்றாள்.

வக்கில்:—"ஏன்? என்ன வேண்டும்?"

ஸம்ஸாரம்:—"மிகவும் அழகுதான்! பொழுது விடிந்தது முதற்கொண்டு, ஆத்தில் அரிசியில்லையென்று முட்டிக்கொள்ளுகிறேன். நீங்கள் சாவதானமாய் என்ன வேண்டும் என்கிறீர்கள்."

வக்கில்:—"ஆனால் நானும் உன்னைப்போல் முட்டிக்கொள்ளவேண்டுமோ? என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?"

ஸம்ஸாரம்:—"ஏன்னா? குழந்தைகளுக்கு இராத்திரிகூடச் சாதம் போடவில்லையே. எல்லாம் பிராணனை வாங்குகின்றன."



வக்கில்:—"எல்லாவற்றையும் தூக்கிக் கிணற்றில் போடு. நான் என்ன செய்யமுடியும்? இனிமேல் என்னால் ஒரு கடைக்காரனிடமும் கடன் கேட்கமுடியாது."

அச்சமயம், 'கீச், மூச்' என்று அழுதவண்ணம், நாலைந்து சிறுபெண்கள் அங்கு ஓடிவந்து, அந்தம்மாளைச் சுற்றிக்கொண்டு, மேலும் அழ ஆரம்பிக்கவே, நம் வக்கிலுடைய கண்களில் நீர் தளும்பியது. பலதரம், சிரமத்துடன் பெருமூச்செறிந்தார். பிறகு, தம் மனைவியை நோக்கி,

"ஏண்டி! எதிர்வீட்டிலிருக்கும் உன் தோழியிடமிருந்து, இரண்டுபடி அரிசி கடன் வாங்கிக்கொள்ளேன். எப்படியாகிலும், இன்று மாலைக்குள், 5 ரூபாய் கடன்—" என்று அவர் மேலே பேசுமுன், அந்தம்மாள், வருத்தம் தாங்காமல்,

"அவளிடம் நான் போகமாட்டேன். நேற்றுக் காவேரிக்கரையில் என் காதுகேட்க, அவள் நம்மைப் பற்றிக் கண்டபடி பேசிக்கொண்டிருந்தாள். அவளிடம் போவதைக்காட்டிலும்—" என்று, தன் பேச்சை முடிக்குமுன், வக்கில்,

"அடியே! அதோ யாரோ வருகிறார்கள் உள்ளே போ." என்று சொல்ல, அந்தம்மாள், அவசரத்துடன், அக் குழந்தைகளை இழுத்துக்கொண்டு, அவ்வறையை விட்டுச் சென்றாள். மறு நிமிஷம் ஒருவர் உள்ளே நுழைந்தார். அவர் மூர்த்தியின் இரஹஸ்யத்தை அறிந்த நம் சாமியாரே ஒழிய வேறல்லர்.

சாமியார், அன்றிரவு, மூர்த்தி அவரைக்கண்ட பொழுது அணிந்துகொண்டிருந்த அதே உடைகளை இப்பொழுதும் அணிந்துகொண்டிருந்தார். முகத்தில், விபூதியைக் குழைத்து ஏகமாய்ப் பூசிக்கொண்டிருந்தார். எனவே, அவருடைய வெளித்தோற்றத்தைக்கண்டு மயங்கி, நம் வக்கில் அவரை மிகவும் மரியாதையுடன் வரவேற்று, சமீபத்தி

லிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்ள சாமியாரும் அப்படியே செய்தார். வக்கில்,

"ஐயா! தற்சமயம் நான் உங்களுக்குச் 'செய்யக் கூடியதென்ன?" என்று விசாரிக்க,

சாமியார் :—"உம்மிடம் ஒரு முக்கிய விஷயத்தைப்பற்றிப் பேசும்பொருட்டு வந்திருக்கிறேன்."

வக்கில் :—"அப்படியா? அஃதென்ன விஷயமோ?"

சாமியார் :—"சமீபத்தில், உம்முடைய நண்பர் வக்கில் தாண்டவம்ஐயர், கொலைசெய்யப்பட்டதை நீர் அறிந்திருப்பீர்?"

வக்கில் :—"ஆகா! நன்றாய்த் தெரியும். பாவம்! மிகவும் நல்ல மனுஷ்யர்."

சாமியார் :—"வாஸ்தவம்! ஆனல், அவர் தம் மூத்தபிள்ளை சம்பந்தப்பட்டவரையில், அவ்வளவாகச் சரியாய் நடந்துகொள்ளவில்லை."

வக்கில் :—(வியப்புற்று) "நீர் சொல்வது எனக்கு விளங்கவில்லையே."

சாமியார் :—"அப்படியா? அவர் எழுதிவைத்திருக்கும் உயிலை நீர் நன்கறிவீர்."

வக்கில் :—"ஓஹோ! ஆமாம், வாஸ்தவமே! நானும் மற்றொரு சாக்ஷியாகிய ஸ்ரீநிவாஸய்யரும், அவருக்கு எவ்வளவோ சொல்லியும், அவர், தம் மூத்தபையனுக்கு எதையும் எழுதிவைக்கக் கண்டிப்பாய் மறுத்துவிட்டார். ஆனல், அந்தப்பையனைப்பற்றியும் ஊரில் கண்டபடி பேசிக்கொள்ளுகிறார்கள். பாவம்! இனிமேல் அவன் கதி என்னவாகுமோ தெரியவில்லை."

சாமியார் :—"எனவே, அப்பையன்மீது நீங்களும் பரிதாபங்கொள்ளுகிறீர்களென்றே நம்புகிறேன்."

வக்கில் :—"அதில் தடையென்ன? ஆனல் இதில் நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. ஏனென்றால், தாண்ட



வம்ஐயருக்குள்ள சொத்து முழுமையும், அவராலேயே சம்பாதிக்கப்பட்டதாகையால், அதை அவர் தம் இஷ்டப்படி விநியோகஞ்செய்ய அவருக்கு அதிகாரமுண்டு."

சாமியார் :—"இருக்கலாம்! ஆனலும், நீர் இஷ்டப்படும் பக்ஷத்தில், அப்பையனுக்கு உதவிபுரியக்கூடுமென்று நினைக்கிறேன்."

வக்கில் :—"நீர் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை."

சாமியார் :—"ஐயா! தற்சமயம் நாம் வீணில் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. சரி; இருக்கட்டும். அவ்வுயிலில் உம்முடன் சாக்ஷிபோட்ட ஐயன்குளத்தெரு ஸ்ரீநிவாஸய்யரும் இறந்துவிட்டாரென்பது உமக்குத் தெரிந்தே இருக்கும்."

வக்கில் :—"நன்றாய்த் தெரியும். பாவம்! தங்கமான மனுஷ்யர்."

சாமியார் :—"இன்னும் நீர் இதுவரையில், இப்படித் தாண்டவம்ஐயர் உயிலெழுதி வைத்திருக்கிறாரென்பதை யாரிடமும் சொல்லியிருக்கமாட்டீரென்று நம்புகிறேன்."

வக்கில் :—"இதுவரையில் இதைப்பற்றி நான் யாரிடமும் பேசவில்லை. ஏனென்றால், சாக்ஷிபோட்ட நாங்களிருவரும் இதை ரஹஸ்யமாய் வைத்துக்கொள்ளுவதாகத் தாண்டவம்ஐயருக்கு வாக்களித்தோம்."

சாமியார் :—"அப்படியானல், அம் மற்றொரு சாக்ஷியும் இதைப்பற்றி யாரிடமும் பேசியிருக்கமாட்டாரென்று நம்பலாம்."

வக்கில் :—"கண்டிப்பாய் நம்பலாம். அவர் மிகவும் யோக்கியர். அதுவும் தவிர, இவ்வுயில் எழுதப்பட்ட சில தினங்களுக்குள் அவர் இறந்துவிட்டார்."

சாமியார் :—"சரி; தாண்டவம்ஐயரும், தாமிவ்விதம் உயிலெழுதிவைத்தி[illegible]டிருக்கமாட்டார்."

18877.

வக்கில் :—" அவர் தாம் செய்யும் காரியங்களைப் பிறரிடம் சொல்லுவதில்லை."

சாமியார் :—" சரி! இக்காரணங்களால், இன்று காலமே அவ்வுயில் கண்டெடுக்கப்பட்டவரையில், இவ்விதம் ஒரு உயிலுண்டென்பது, உங்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது."

வக்கில் :—" தெரியவே தெரியாது."

சாமியார் :—" எனவே, இப்பொழுது, நீங்கள் இவ்வுயிலைப் பற்றி உங்களுக்கொன்றும் தெரியாதென்றும், அதிலிருக்கும் கையெழுத்து உங்களுடையதல்ல என்றும் சொல்லிவிடும்பக்ஷத்தில், அதன் கதி என்னவாகும்?"

வக்கில் :—(திடுக்கிட்டு) "என்ன சொன்னீர்? என்ன சொன்னீர்?" அவருக்குண்டான ஆச்சரியத்தில், வக்கில் அப்படியே தம்மிடத்தைவிட்டுத் தாவிப் பூமியில் நின்றார். வரவர, அவருடைய முகத்தில் கோபத்தின் குறிகள் தோன்றின. பிறகு, "ஐயா! நீர், இப்பேர்ப்பட்ட காரியத்தை நான் செய்வேன் என்று எதிர்பார்த்ததைப்பற்றி, மிகவும் வருத்தப்படுகிறேன். இதுவரையில் நான் என் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் எக்காரியத்தையும் செய்தவனல்ல. அப்படிச் செய்திருக்கும்பக்ஷத்தில், தற்சமயம் நான் எவ்வளவோ நல்லஸ்திதியிலிருப்பேன்."

சாமியார் :—(புன்சிரிப்புடன்) "ஸ்வாமி! நீர் பிழைக்கும் வழியைச் சற்றுமறியாதவரென்றே சொல்லவேண்டும். நான் சொல்லுவதைக் கவனியும். நீர் நான் சொல்லும் விதம், உமக்கு இவ்வுயிலைப்பற்றி ஒன்றுமே தெரியாதென்று சொல்லிவிடும்பக்ஷத்தில், உமக்கு ரூபாய் 5000 கிடைக்கக்கூடும்."

வக்கில், இதைக்கேட்டதும், பிரமித்து, சாமியாரை உற்றுநோக்கினார். அவருடைய மனம் சலிக்க ஆரம்பித்தது. ஆனால் ம[illegible] ஐயா! நீர் ரூபாய்



லக்ஷம் கொடுத்தபோதிலும், இப்பேர்ப்பட்ட காரியத்தை ஒருநாளும் செய்யமாட்டேன்." என்றார்.

வக்கிலின் சபலத்தைக் கண்ட சாமியார், " ஸ்வாமி! தற்சமயம், ரூபாய் 5000 உமக்கு எவ்வளவுதூரம் உபயோகப்படுமென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். இதோ பாரும்! நீர், சம்மதிக்கும்பக்ஷத்தில், இந்த ரூபாய் 500ஐ நீர் உடனே எடுத்துக்கொள்ளலாம். இன்று, அநேகமாய், இதைப்பற்றிப் பேச, தாண்டவம்ஐயருடைய மற்றொரு புத்திரனால் நீர் அழைக்கப்படுவீர். அங்கு அவர்கள் முன்னிலையிலும், நான் சொன்னபடியே நீர் சொல்லிவிட்டால், இன்று இரவு 10 மணிக்குள் மேலும் ரூபாய் 500 உம்மிடம் வந்துசேரும். பிறகு, உம் வார்த்தையின் பலனாய், இந்த மூர்த்தியென்ற பையனுக்குத் தன் தந்தையின் சொத்தில் பாதி கிட்டியதும், பாக்கியுள்ள ரூபாய் 4000 உமக்குக் கிடைக்கும்." என்று சொல்லிக்கொண்டே, தன் இடுப்பிலிருந்து, ஒரு சுருள் நோட்டை எடுத்துத் தன் எதிரிலிருந்த ஒரு மேஜையின்மேல் வைத்தார்.

பணத்தைக் கண்டதும், வக்கிலுடைய மனதில் பெரிய யுத்தம் ஆரம்பித்தது. " அடே! வேண்டாம்! வேண்டாம்! பணத்தில் மயங்கிச் சத்தியத்தைக் கைவிடாதே.' என்று ஒரு நினைவு தடுக்க, மற்றொன்று "பைத்தியமே! நீ எவ்வளவு காலம் இப்படிக் கஷ்டப்படமுடியும்? உடனே, உன் முன்னிருக்கும் பணத்தை எடுத்துக்கொண்டு, சாமியார் சொல்வதற்குச் சம்மதி." என்று துரிதப்படுத்த, என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளித்தார். அச்சமயம், அவருடைய பெண்களிலொருவள் அங்கு ஓடிவந்து, " அப்பா! உடனே வாங்கோ, மீனாக்ஷிக்கு என்னமோ வந்துடுத்து." என்று கூச்சலிட, வக்கில், ஒன்றும் தோன்றாமல், பரபரப்புடன் எழுந்து, சாமியாரை இருக்கும்படி சொல்லிவிட்டு, சமையலறையைநோக்கி ஓடினார். அங்குச் சுமார் 10 வயதுள்ள ஒரு பெண் மூர்ச்சைவிட்டுத் தரையில் பிணம்போல் கிடந்தாள். வக்கில், கவலையுடன், பக்கத்தில் நின்றுகொண்டிருந்த தம் மனைவியை அதற்குக் கார

ணம் கேட்க, அந்தம்மாள், அக் குழந்தை சாப்பிடவேண்டுமென்று மிகவும் கஷ்டப்படுத்தியதால், தான் ஹிம்ஸை பொறுக்காமல், அடித்ததாகவும், முதல்நாளிரவிலிருந்து ஆகாரமில்லாததால், அது களைத்து விழுந்துவிட்டதாகவும் சொல்லவே, அவர் பதறிய மனதுடன், அக் குழந்தைக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்யலானார். சில நிமிஷநேரத்திற்கெல்லாம், அக்குழந்தை, தன் கண்களைத் திறந்து, பயந்த குரலில், "அப்பா! அப்பா! பசிக்கிறதே! பசிக்கிறதே." என்று விசித்து விசித்து அழவே, வக்கிலுடைய நேத்திரங்களிலிருந்து, நீர் தாரை தாரையாய்க் கொட்ட ஆரம்பித்தது. பிறகு சொல்லொணாத் துயரத்துடன் திரும்பி நாலாபக்கங்களையும் கவனித்தார். ஒவ்வொரு மூலையிலும், சுண்டிய முகத்துடனும், ஒட்டிய வயிறுடனும், ஒரு குழந்தை காணப்பட்டது. வக்கில் ஒருதரம் பெருமூச்செறிந்தார். பிறகு, "சீ! இக்கஷ்டம் இனி என்னால் பொறுக்கமுடியாது! வந்தது வரட்டும்." என்று சொல்லிக்கொண்டே, மறுபடியும் சாமியாரிடம் சென்றார்.

அதே பிற்பகல் சுமார் 3 மணி இருக்கும்.

அச்சமயம், தாசி ராஜலெக்ஷ்மியின் வீட்டில் நடந்த ஒரு சம்பவத்தைக் கவனிப்போம். அவள், அவசரத்துடனும், கவலையுடனும், தன் பீரோவில் எதையோ தேடிக்கொண்டிருந்தாள். ஆனால் கால்மணிநேரத்திற்குமேல் அவள் தேடியும், அது அகப்படாததால், கோபத்துடன், "இது அந்த முண்டை அம்புஜம் செய்தவேலை என்பதில் சந்தேகமில்லை." என்று தன் வாயைவிட்டுக் கூறினாள். பிறகு, தன் வேலைக்காரியை அழைக்க, அம்புஜம், பயந்த பார்வையுடன், அங்கு வந்ததும், ராஜலெக்ஷ்மி, உரத்த குரலில்,

"ஏண்டி! அம்புஜம்! நான் நேற்று இரவு இந்தப் பீரோவில் 50 ரூபாய் பணம் வைத்திருந்தேனே; அது



போனவிடமெங்கே?" என்று கேட்க, அப் பெண் திடுக்கிட்டு, வாய்குளற,

"அம்மா! அதைப்பற்றி எனக்கெப்படித் தெரியும்?" என்றாள்.

**தாசி** :—"அடியே! வீணாய்ப் புளுகாதே. இப் பீரோவை உன்னைத் தவிர வேறுயாரும் திறக்கும் வழக்கமில்லை. பணத்தை நீயே எடுத்திருக்கவேண்டும்."

**பெண்**:—"அம்மா! இப்படி அபாண்டமாய் நீங்கள் இப் பழியை என்மேல் சுமத்துவது நியாயமல்ல. தெய்வத்தின்மேல் ஆணையாய், நான் அப் பணத்தை எடுக்கவில்லை.

**தாசி**:—"சீச்சீ! வாயைமூடு. வீணாய்த் தெய்வத்தைச் சந்தியில் இழுக்காதே. அடியே! போலீசுக்கு தெரிவிக்குமுன் இன்னொருதரம் கேட்டுவிடுகிறேன். உள்ளதைச் சொல்லிவிடு. அப்பணத்தை நீ என்ன செய்தாய்?"

**பெண்** :—"அம்மா! நீங்கள் இப்படிப் பேசுவது அழகல்ல. இன்னும், நீங்கள் போலீஸாருடைய பெயரைச் சொல்லி, என்னைப் பயமுறுத்துவதைக்காண எனக்கு அதிக ஆச்சர்யமாயிருக்கிறது. அம்மா! வாஸ்தவத்தில் போலீஸாரைக்கண்டு பயப்படவேண்டியது நீங்களேயொழிய நானல்ல."

தாசி ராஜலெக்ஷ்மி இதைக் கேட்டதும் திடுக்கிட்டாள். உடனே, "ஏண்டி! மட்டிநாயே! என்ன சொன்னாய்?" என்று கர்ஜித்தாள். அவளுடைய முகம் கோபத்தினால் சிவந்தது. ஆனால் அம்புஜம், சற்றும் பயப்படாமல்,

"வீணாய்க் கண்டபடி என்னைத் திட்டவேண்டாம். அம்மா! எனக்கு எல்லாம் தெரியும். கொஞ்சம் உஷாராயிருங்கள்." என்றாள்.

"சீச்சீ! அதிகப்பிரஸங்கிக் கழுதை. உனக்கு என்னடி தெரியும்.'' என்று சொல்லிக்கொண்டே ராஜலெக்ஷ்மி,

கோபத்தினால் தன்னைத்தானே மறந்தவளாய், அப்படியே புலிபோல் அம்புஜத்தின்மீது பாய்ந்து, அவளுடைய தலைமயிரைப் பிடித்துக்கொண்டு, அவள் கன்னங்களில் பளீர் பளீர் என்று நாலைந்துதரம் அறைந்துவிட்டாள். வேலைக்காரி அம்புஜம், கோபாவேசங்கொண்டு, தன் யஜமானியின் கரங்களை வெறுப்புடன் உதறித்தள்ளிவிட்டு,

"அடியே! நீ என்னை இப்படி அடித்ததற்கு உன்னை இலேசில் விடமாட்டேன். இதோ உடனே போலீஸாரிடம் சென்று எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன். நீ கொலைபாதகன் ஒருவனுக்கு உடந்தையாயிருந்தது எனக்குத் தெரியாதென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்! வேசிமுண்டை." என்று கூச்சலிடவே, ராஜலெக்ஷ்மி நடுங்கிவிட்டாள். அவள், உடனே நயத்துடன்,

"அடி அம்புஜம்! கண்டபடி உளறாதே. வாயை மூடிக்கொண்டிரு." என்று சமாதானப்படுத்தினாள். ஆனால், அம்புஜம், சற்றும் அதைக் கவனிக்காமல், தன் யஜமானியின் பீதியைக்கண்டு, மனமகிழ்ந்து, மேலும் உரத்த குரலில்,

"அடியே! என்னை மயக்கப் பார்க்காதே. அவ்வேலையை, உன்னிடம் பல்லையிளித்துக்கொண்டுவரும் பேடிகளிடம் வைத்துக்கொள். நான் நினைக்கும்பக்ஷத்தில் ஒரு நொடியில் உன்னைச் சந்தியிலிழுத்துவிடமுடியும் என்பது உனக்கே தெரியும்." என்றாள். ராஜலெக்ஷ்மி,

"அடி போடி அசடே! நீ என்ன செய்யமுடியும்? உனக்கென்ன தெரியும்?" என்றாள். அம்புஜம்,

"எனக்கென்ன தெரியுமென்று கேட்கிறாய்? இதோ சொல்லுகிறேன் கேள். சில தினங்களுக்குமுன், மடத்துத் தெருவில் கொலைசெய்யப்பட்ட வக்கில் தாண்டவம்ஐயரை, இப்பொழுது உன்னை வைத்துக்கொண்டிருக்கும், அவருடைய மகனாகிய, டபீர்த்தெரு மைனரே கொன்றாரென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். இன்னும், அது நடந்த மறுநாள், அவர் உனக்குக் கடிதம் கொடுத்தனுப்பிய ஆசாமி



யுடன் நீ பேசிக்கொண்டிருந்ததை முழுமையும் நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அதன் பலனாய், உடனே போலீஸ்காரர் உன்னிடம் வந்து மைனரைப் பற்றி விசாரித்தபொழுது, நீ அவர் முதல்நாளிரவுமுழுமையும் உன்னுடனிருந்ததாகப் புளுகினாய். பிறகு, அவர் உனக்கு வாங்கிக்கொடுத்த அக் கைக்குட்டைகளை எல்லாம் ஒளித்துவைத்துவிட்டாய். ஏனென்றால், அவைகளில் ஒன்று, கொலைநடந்த இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டது. ஆனால், நீ ஒளித்துவைத்த அக் கைக்குட்டைகளெல்லாம் இப்பொழுது என்னிடமிருக்கின்றன. தவிர, அவர் உனக்கனுப்பிய அக் கடிதமும் என்னிடமிருக்கிறது. எனவே, நான் இதையெல்லாம் போலீஸாரிடம் சொல்லிவிடும்பக்ஷத்தில் உன்கதி என்னவாகும்? அடியே! கொலைகாரனுக்கு உடந்தையாயிருந்த நீ கண்டிப்பாய்த் தண்டிக்கப்படுவாய். ஆஹா! அம்புஜம் வாயில்லாப்பூச்சியென்று நினைத்தல்லவோ இப்படி அடித்துவிட்டாய். இரு! இரு! உன்னைச் சந்தியிலிழுத்துவிடுகிறேன்." என்றாள்.

ராஜலெக்ஷ்மியின் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது. அவளுடைய கைகால்கள் நடுங்கின. அவள் மிகவும் கெஞ்சிய குரலில்,

"அடி! அம்புஜம்! நான் இதுவரையில் உனக்குச் செய்தவைகளை எல்லாம் மறந்துவிட்டாயே. ஏண்டி! என்னவோ கோபத்தினால் ஒரு கட்டுத் தட்டிவிட்டேனென்று—" என்று அவள் மேலேபேசுமுன், அம்புஜம்,

"என்ன? தட்டா தட்டினாய்? ஏண்டி! பிசாசு அறைவதுபோல் அறைந்தாயே. இன்னும் என் காதுகளில் "கிர்" என்று சப்தம் செய்கிறதே. அடி! மாயக்கள்ளி! உன் பாச்சா அம்புஜத்தினிடம் செல்லாது. இதோ! உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டிற்குப் போகிறேன்." என்று சொல்லிவிட்டு, ஆவேசங்கொண்டவள்போல வெளியே ஓடவே, தாசி ராஜலெக்ஷ்மி, அவளைப் பலவாறு கெஞ்சிக்கொண்டே, அவளைப் பின்பற்றி ஓடினாள். ஆனால்

அம்புஜம் அங்குப் பிடித்த ஓட்டத்தை இன்ஸ்பெக்டர் முனிசாமி நாயுடுவின் வீட்டை அடையும்வரையில் நிறுத்தவில்லை.

நிற்க, போலீஸ் இன்ஸ்பெக்டர் முனிசாமி நாயுடு சிந்தனையிலாழ்ந்தவராய்த் தம் அறையில் உட்கார்ந்துகொண்டிருந்தார். சமீபத்தில், மடத்துத்தெருவில் நடந்த அக்கொலை வெளியானதுமுதற்கொண்டு, அவருடைய மனதில் சிறிதும் நிம்மதியில்லாமலிருந்தது. அதற்குப் பலகாரணங்களுண்டு. தற்சமயம் தமக்குத் தேகசவுக்கியமில்லை எனச் சொல்லி, மூன்றுமாதகாலம் லீவு வாங்கிக்கொண்டுவிடுவதெனத் தீர்மானித்து, தம் மேல் அதிகாரிகளுக்குக் கடிதமெழுதினார். ஆனால் அதற்கு இன்னும் பதில் வரவில்லை. அப்பொழுது, அவருடைய வேலைக்காரன் ஒருவன் அவரிடம் வந்து, அவரை உடனே ஒரு பெண்பிள்ளை பார்க்க வேண்டுமென்று சொல்லுவதாகக் கூறவே, அவர், கோபத்துடன்,

“யாரடா அவள்? இந்த இழவுஊருக்குவந்ததிலிருந்து ஒருநிமிஷமும் ஓய்வில்லை. அவளுக்கு என்னவேண்டும்? யாராவது அவளுடைய கையைப் பிடித்து இழுத்தானோ?” என்று சீறிவிழுந்தார். ஆனால், மறுநிமிஷம், தாம் கோபிப்பதில் பிரயோஜனமில்லை என்று நினைத்தவர்போல், “சரி! அவளை இழுத்துக்கொண்டுவா.” என்று உத்தரவிட்டார்.

உடனே, அவ்விடத்தைவிட்டுச் சென்ற அவ் வேலைக்காரன், சற்றுநேரத்திற்கெல்லாம், தாசி ராஜலெக்ஷ்மியின் வேலைக்காரியாகிய அம்புஜத்துடன் திரும்பிவந்தான். அப்பெண், மிகவும் தெளிவாய், தனக்குத் தெரிந்த விஷயத்தை எல்லாம் சொல்லிமுடித்தாள்.

அதைக் கேட்டதும், நம் முனிசாமி நாயுடுக்குண்டான ஆச்சரியத்திற்களவில்லை.



அதேதினம், அதேபிற்பகல், சுமார் 4 மணியிருக்கும்.

ராஜேந்திரன், தன் வீட்டில், சபேசனை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருந்தான். சற்றுநேரத்திற்கெல்லாம், அங்கு வந்த சபேசன்,

“ஏன்டா! ராஜேந்திரா! வக்கில் சிவராமய்யருக்கு, வந்து உன்னைக் காணும்படி கடிதமெழுதியனுப்பினாயோ?” என்று வினவ, ராஜேந்திரன்,

“அடாடா! மறந்தேபோய்விட்டேன். இதோ உடனே எழுதியனுப்புகிறேன்.” என்று சொல்லி, மேலும் தாமதமின்றி, ஒரு கடிதமெழுதி அதைத் தன் வேலைக்காரன் ஒருவன் மூலம், சிவராமய்யருக்கு அனுப்பினான்.

பிறகு, நண்பர்களிருவரும் தாண்டவம்ஐயருடைய அறைக்குச்சென்று, அவருடைய கடிதங்களையும், இதர சாமான்களையும் சோதிக்கலானார்கள். ஆனால் அவைகளிலிருந்து, சபேசன் எதிர்பார்த்தவிதம், யாதொரு உளவும் அகப்படவில்லை. சபேசன், கடைசியில் மனச்சோர்வுடன், தன் தோழனைப் பார்த்து,

“ராஜேந்திரா! இது நாம் சாதாரணமாய் நாவல்களில் வாசிக்கும் மர்மங்கள்போலவே இருக்கிறது.” என்றான்.

“சரி இருக்கட்டும். நீ இதுவரையில் கண்டுபிடித்ததைச் சொல்லு.” என்று ராஜேந்திரன் வேண்டிக்கொள்ள, சபேசன், தான் மூர்த்தியைப்பற்றிக் கண்டறிந்ததை எல்லாம் சொல்லவே, ரஜேந்திரன், திகைப்புற்றுச் சொல்லொணாப் பீதியுடனும் கவலையுடனும்,

“சபேசா! ஆனால் வாஸ்தவத்தில், அவரை மூர்த்தியா கொலை செய்திருப்பானென்று சொல்லுகிறாய்?” என்று வினவினான்.

சபேசன் :— நான் அப்படிச் சொல்லவில்லை. ஆனால் இவ் விஷயங்களையெல்லாம் போலீஸார் அறிந்துகொள்ளும்பக்ஷத்தில், மூர்த்தி உடனே கைதுசெய்யப்

படுவானென்பதில் சந்தேகமில்லை. இன்னும், உன் தமயன், தனக்குத் தெரிந்த பல விஷயங்களை ஒளிக்கிறானென்பது நிச்சயம்.''

ராஜே :—'' சரி! இப்பொழுது நாம் செய்யவேண்டியதென்ன ?''

சபேசன்:—''அவன் மறுபடியும் இங்கு வரும்பொழுது, தற்சமயம் அவனைச் சூழ்ந்துகொண்டிருக்கும் ஆபத்தை அவனுக்கு எடுத்துக்காட்டி, உள்ளதை ஒப்புக்கொள்ளும்படி செய்யவேண்டும். ஆனால் அது எளிதான காரியமல்ல. ஏனென்றால், அவன் நம்மிருவரையும் விஷம்போல் வெறுக்கிறான்.''

ராஜே:—'' அதனால் பாதகமில்லை. வேண்டுமானால், நான் அவனுடைய கால்களில் விழுந்து கெஞ்சவும் தயார். ஹா! சபேசா! ஒருகால் இவ்விஷயங்கள் போலீஸாருடைய செவிகளுக்கெட்டி அவன் கைது செய்யப்படும்பக்ஷ—''

சபேசன் :—'' சரி! இப்பொழுது அதைப்பற்றிப் பேசவேண்டாம். இனி, நாம் மேலே செய்யவேண்டியது என்ன—'' என்று பேசிக்கொண்டேயிருக்கையில், ஒரு வேலைக்காரன் அங்கு வந்து சபேசனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதில், கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது :—

'' உடனே வரவும்.—தங்கவேலு.''

இதை வாசித்ததும் சபேசன், பரபரப்புடன்,

'' நான் சொன்ன சாமியாரைக் கவனித்துவரும் துப்பறிபவன், என்னை உடனே வரும்படி எழுதியிருக்கிறான். ஏதோ விசேஷமிருக்கவேண்டும். நான் 7 மணிக்குள் திரும்பிவருகிறேன்.'' என்று சொல்லிவிட்டுத் துரிதமாய் வெளியே சென்றான்.

சபேசன், நம் சாமியாருடைய வீட்டின் சமீபம் வந்தபொழுது, அது வெளிப்பக்கம் பூட்டப்படாதிருந்தது,



நாட்டிலேயே இனி இரார்கள். நீ அவருடன் கூடி சகல சுகங்களும் அனுபவிக்குங்காலை இப்பெண் ஒன்று மத்தியிலிருப்பது உனக்கு சிற்சில சமயங்களில் துக்கத்தை உண்டாக்கும். ஆகவே ஈசனே அவள் உன்னுடனிருப்பது தவறு என எண்ணி பிரித்திருக்கலாம். இதற்காக நீ வருந்தலாமா? ஆனால் உலகுக்காக வருந்துவதுபோல் அபிநயிக்கவும் வேண்டும்.

இந்திரா:—ஐயா! என்னை என்னவென்று உம் மனதில் எண்ணியிருக்கின்றீர்? ரோஜாப் புஷ்பத்தின் வாசனையை அறிந்தவன் அரளியை முகர எண்ணுவானா? உத்தம புருஷர்களுடன் பழகியவர்கள் நீசனைக் கண்ணெடுத்துப் பார்ப்பார்களா? ஹம்ஸத்தைப் பார்த்த கண்களால் காக்கையைப் பார்க்க மனம் வருமா? சமுத்திரக்காற்று உட்கொண்டவனுக்கு குளக்காற்று எப்படியிருக்கும்? உம்மை என் கலிதீர்க்கவந்த பிரபு என எண்ணிய எண்ணம் வீணா? நேற்று இரவு நான் சொற்பனம் கண்டதும் அற்பசுகமா! நீரும் அந்த நீசன் இந்திரகுமாரனும் ஒன்றாக என்னைக்கெடுக்க சதியாலோசனை செய்திருக்கின்றீரா? நீர் அவருக்கு கையாளா? ஐயா! உம்மை அன்று பார்த்ததுமுதல் பெரும் உத்தமர் என எண்ணிவந்திருக்கின்றேன். அதற்கு தகுந்தாற்போல் நீரும் இதுகாறும் நடந்து வந்திருக்கிறீர். என் எண்ணத்தை மாற்றாது எனக்கு உபகாரம் செய்யும். வீண்போகாது அவைகள். ஈசன் எவ்விதமும் ஆசிர்வதிப்பார்.

இந்திரநாத் :—பெண்ணே! வீண் பதட்டமடையாதே. நான் சொல்வதைக் கேள். உன் புருஷனிருந்தகாலை உனக்கும் அவருக்கும் நேசமில்லையென்றும் அப்பொழுதே இந்திரகுமாரனும் நீயும் காதலித்து வந்ததாயும், அவர் (உனது புருஷன்) தற்செயலாய் போகவே கலி நீங்கிற்று என்று நீங்கள் சந்தோஷப்பட்டு, கணவனென மதித்துவந்தவன் உயிரிழந்த

வருஷமானவுடன் கலியாணம் செய்துகொள்வதாயும் நிச்சயித்திருப்பதாக சொல்லிச் சென்றார் எனது நண்பர். ஆகவே என்னையும் உன்னிடம் மிகுந்த ஜாக்கிரதையுடன் பழகச்சொன்னார். மேலும் இவ் வீட்டிலுள்ள சுவர்களுக்கெல்லாம் காதுகளுண்டென்றும் நான் செய்யும் ஒவ்வொரு காரியமும் அவருக்குத் தெரியவரும் என்றும் ஆகையால் மிக்க ஜாக்கிரதையுடனேயே நடக்கவேண்டுமென்றும் சொன்னார். அவர் வார்த்தைக்குக் கட்டுப்பட்டே நான் நடக்கின்றேன். நீ என்னை பரீக்ஷிக்கின்றாயா, என் மனம் எப்படி இருக்கின்றதென் பார்க்க?

இந்திரா:—ஐயா! நீரும் கேளும். இந்தியநாட்டில் பிறந்து கற்பைக் கார்க்க முன்வராத பெண்டீரும் இருப்பார்களா? நீரும் படித்திருப்பீரெனவே நம்புகிறேன். ராஜபுத்ர ஸ்திரீகள் எத்தனைபேர் தங்கள் கணவனிறந்ததும் தீக்குளித்தனர்? எதன் பொருட்டு? எங்கு தங்கள் கற்பிற்கு பங்கம் வருமோ என எண்ணியன்றோ! பத்மனியின் கதையை நீர் கேட்டதில்லையா? தன் நிமித்தம் அல்லாவுடீன், தன் கணவனைச் சிறை கொண்டு போக, அவன் விருப்பத்திற்கு இசைந்தவள் போல் நடித்து கணவனை விடுவித்து மறுமுறை கணவனிறந்ததும் தானும் தீக்குளிக்கவில்லையா? இம்மாதிரி நம் தேசத்தில் நடப்பது சஹஜமே. நான் எந்த ஜாதியைச் சேர்ந்தவளாயிருப்பினும் நம் இந்தியா மற்ற நாடுகளுக்கு போதிக்கக்கூடிய தத்வத்தில் ஒன்றாகிய 'ஸ்த்ரீகளுக்கு கண்கண்ட தெய்வம் அவர்கள் புருஷர்களே. அவர்களுக்குப் பின் அவர்கள் நடைபிணங்களே' என்பதை உலகுக்கு என்னாலானவரை போதிக்க முன்வரவும் நிச்சயித்திருக்கிறேன். என்னை வேறாக நினையாதீர். ஆனால் நீ ஏன் உன் கணவனிறந்தபின் உயிருடனிருக்கின்றாய் எனக் கேட்கலாம். குழந்தையின் நிமித்தம் என் ஆவி நின்றது.



ஐயோ! குழந்தாய் நீயுமா என்னைவிட்டுப் பிரிய வேண்டும்! பிரபோ! இன்னும் உமக்கு என்மேல் உள்ள சந்தேகம் நீங்கவில்லையா? ஐயோ! இப்பாவி கொடும்பாவியோ?

இந்திரநாத்:—ஆனால் இந்திரகுமாரர் என்னிடம் சொன்னதெல்லாம் பொய்யா? உண்மையில் உனக்கு அவனிடம் பிரியமில்லையா? உன்னை மணக்காவிடில் அவனுயிர் நில்லாதென்று என்னிடம் கூறினானே.

இந்திரா:—உமக்கு சந்தேகம் இன்னும் நீங்கியபாடில்லை. முற்றும் சொல்லுகின்றேன் கேளும். எனது நாதர் அந்த உத்தமோத்தர், தர்மசீலர், ஏழைகளுக்கு நண்பர் அகஸ்மாத்தாய் உயிர்துறக்கவும், அவர் பிணத்தை நான் பார்வையிடலாகாதென மறித்தான் பாவி. ஐயோ! சாதாரண மனிதர்கள் செய்யும் புண்ணியம் கூட நான் செய்யவில்லை! ஆனால் என் பதியும் என்னை விட்டு பிரியுங்காலை என் சவத்தினிடம் ஒருவரும் தீண்டாதீர் எனவே சொல்லியிருந்தார். அதை மனத்தில் இருத்தியே நானும் துக்கத்தை அடக்கிக்கொண்டு குழந்தையைத் தேற்றிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். அவர் எவ்வாறு அடக்கம் செய்யப்பட்டாரென்றும் நான் அறிகிலேன். அம்மஹான் உயிருடனிருந்தக்காலை மிக்க உயிர் நண்பராக விளங்கிய இப்பாதகன் அவர் இறந்த நான்காம் நாள் என்னைத் தோட்டத்திற்கழைத்துச் சென்று ஆலகால விஷத்தைப்போல் அதுகாறும் அடக்கியிருந்த எண்ணத்தை வெளியிட்டான். நான் அச்சமயம் உதவியன்னியிலிருக்க 'இசைந்தவள்போல் நடித்து ஏமாற்றுவதே சரி' என எண்ணியும், நானிறப்பின் குழந்தை திண்டாடும் என எண்ணமும் உண்டாக, ஒரு வருஷம் கழியட்டும் என கூறினேன். அவரும் சந்தோஷத்துடன் பிரிந்து என்னை சிற்சில சமயங்களில் வந்து பார்த்துப் போய்க்கொண்டிருந்தான். 'சில மாதங்

களுக்குமுன் உமது வருகை பேபரில் வரவும் அதை அவனும் என்னிடம் தெரிவிக்க உம்மை முடியுமானால் இந்த வீட்டுக்கே அழைத்துவருமாறு வேண்டினேன். நீர் பெண்பிள்ளை தனிமையாயிருக்கும் வீட்டில் இருக்க சம்மதிக்கவில்லையெனக் கூறி, நீர் பார்க்கவரின் மிகவும் ஜாக்கிரதையாகவே நடந்துகொள்ளவேண்டுமென்றும் எச்சரிக்கை செய்து தன் சிறிய தந்தையைக் காண சென்றிருக்கின்றான். இதுவே இவ்வபாக்யவதியின் சரிதை. இதற்குமேல் ஒன்றும் மனமறிய எனக்குத் தெரியாது. நேற்று காலை திடீரென நான் ஒரு சொற்பனம் கண்டேன். அதன்படியே உம்மை இங்கு அழைத்துவரவும் ஏற்பாடு செய்தேன். ஆகையால் பிரபுவே நீரே இனி என்னை காத்து ரக்ஷித்தல்வேண்டும்.

**இந்திரநாத் :**—அம்மணி! உமது கதையைக் கேட்டேன். மிகவும் பரிதபிக்கத்தக்கதாக இருக்கின்றது. சொற்பனம் ஏதோ கண்டதாகக் கூறுகின்றீரே! அது என்னவென்று சொல்லலாமோ?

**இந்திரா :**—ஐயா! இனி உம்மிடம் ஒளிக்கக்கூடியவையுமிருக்கின்றதா? தற்செயலாய் ஓர் மனிதர் என் வீடு வரவும், நான் அவரையே இப்பாவி இந்திரகுமாரனிடமிருந்து காப்பாற்றும்படி கேட்கவும், அவரும் அதற்கு இசையவும், அவரும் நானும் சந்தோஷமாக இருப்பதுபோலவும், என்னைவிட்டு பிரிந்திருந்த குழந்தை என்னைச் சேர்ந்ததுபோலவும், அவள் மூலமாகவே என் தந்தையை நான் கண்டுகொண்டதாகவும் இவ்வித சந்தோஷ சமாசாரங்கள் வரும்பொழுது எனது நண்பர் எனது நாதராகவே இருக்குங்கால் ஓர் அசரீரி 'பெண்ணே! உன் வீட்டிற்கு வந்தவரை நீ சரணமடை' என்பதுபோலவும் கண்டும் கேட்டேன். கண்விழித்தேன். ஒன்றையும் காணேன். விடியற்கால சமயம் கண்டேனாகையால் ஒருக்கால்



சம்பவிப்பினும் சம்பவிக்கலாமெனக் கருதியே உம்மை உடனே அழைத்துவருமாறு கமலத்தை அனுப்பித்தேன். நீரும் வந்தீர். குழந்தையை என்னுடன் சேர்த்துவைப்பதும், அப்பாவி இந்திரகுமாரனிடமிருந்து காப்பாற்றுவதும் இனி உமதுபாரம். இன்னுமொன்றும் நிச்சயித்துவிட்டேன் இன்றுகாலை. அது........

**இந்திரநாத் :**—அதுவுமென்ன?

**இந்திரா :**—அதைப் பின்னிட்டுச் சொல்கின்றேன். நீர் எவ்விதம் என்ன சொன்னாலும் அதன்படி நடக்கின்றேன்.

**இந்திரநாத் :**—நான் சொல்வதைக் கேள். உனக்கு இந்திரகுமாரனிடமிருந்து தப்பவேண்டுமென்றால் நான் சொல்லுவதற்கு கொஞ்சமும் குறுக்கு சொல்லாது நடக்கவேண்டும். தவிரவும் மனிதருக்கு மனிதர் ஆபத்துக்காலத்தில் உதவவேண்டாமா? ஒரு மனிதன் கஷ்டத்திலிருக்கின்றானெனத் தெரிந்து தெரியாமற்போவது மேலான மானிடப் பிறவிக்கழகா? ஆகையால் என் ஆசை என்னவெனில், நீ இந்த அற்பக்குணமுள்ள இந்திரகுமாரனை மறந்து கன்னியாப் பெண்ணாயிருந்தகாலை செய்துவந்த உத்தமத் தொழிலாகிய ஆஸ்பத்திரியில் நர்ஸ் உத்தியோகம் மறுமுறை ஏற்றுக்கொள்ளவேண்டியது. அப்படி இருக்க இசைவாயாயின் அதற்குள் அதிர்ஷ்டமிருப்பின் எல்லாம் சுபமாகவே முடியலாம். வேலையிருப்பின் மனச் சஞ்சலமேற்பட காரணமிராதன்றோ?

**இந்திரா :**—பிரபுவே! உம்மையே தஞ்சமென்றடைந்தபின் உம் வார்த்தைக்கு விரோதமாக நடக்க எண்ணுவேனா? கனவிலும் கருதேன் என்பதை சத்யமாய் நம்பும். எனது குழந்தையைப்பற்றிய சமாசாரம் எனக்குத் தெரியவேண்டுமே?

இந்திரநாத் :—பெண்ணே! நானும் என்னால் கூடிய வரை முயன்று பார்க்கிறேன். எனக்கு எதாவது தெரியவரின் உடனே வந்து உனக்கும் தெரிவிக்கிறேன்.

இந்திரா :—சரி! நான் எப்பொழுது புறப்படவேண்டும். அதை நிர்ணயப்படுத்தும்.

இந்திரநாத் :—நாளை புதன். நான் எல்லாம் வந்து நேரில் சொல்கின்றேன். கடவுளை நம்பு. சாதாரண மனிதர்களால் என்ன செய்யக்கூடும்?

இந்திரா :—ஐயா! நீரும் என் நாதர் எனக்கு அடிக்கடி உயிருடனிருந்தகாலை கூறிவந்தவிதம் 'கடவுளை நம்பு! கடவுளை நம்பு' எனவே கூறிவருகிறீர். உம்மைப் பார்ப்பின் என் நாதர் சாயையும் இருக்கின்றது. மேலும்.......

இந்திரநாத் :—நான் உன் நாதரின் நண்பனென இன்னும் நீ அறியவில்லையா? நான் போய்வருகின்றேன்.

பிரிகின்றனர்.

# ACT V.

## SCENE I.

இந்திரகுமாரன் வீடு.

இந்திரகுமாரன் சாகும் தருவாயில் படுத்த படுக்கையிலிருக்கின்றான்.

காலை நேரம்.

இந்திரகுமாரன் :—'முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்' என்பதை மறந்தேன். ஐயோ! நான் செய்த துர்கிருத்யங்கள் என்னை இக்கதிக்கு கொண்டுவந்துவிட்டன! இன்னும் அரைமணி நேரத்திற்குள் என் ஆவி போகப்போகின்றது. எனது நண்பன் கூறிய பிரகாரம் காமப்பேய்க்கு இடங்கொடாமலிருந்திருப்பின் இக்கதி எனக்கு வாய்த்திருக்குமா? நல்ல உத்தமியை



கெடுக்க முயன்றேன். அவளைத் திண்டாடும் நிலைமைக்கு கொண்டுவந்தேன், அவ்விதத்திலாவது அவள் என்னை நேசிப்பாளாவென்று. ஐயோ! கற்புள்ள மங்கையர் தங்கள் கற்பிற்கு பங்கம் வராமலிருக்க பல சூழ்ச்சிகள் செய்வார்களென்பதை காமப் பித்துக்கொண்ட நான் மறந்தேன்! அவளுக்கு முற்றிலும் பாதகமிழைத்தேன்! நானில்லா சமயம் அவள் பெண், என் நண்பனின் குமாரியையும் காணோமாம். அதுவும் எனது சூழ்ச்சி எனவே அநேகர் சந்தேகிக்கின்றனர். நான் என் சிறிய தந்தையைக்காண சென்றிருந்தேனே. அவர் இறக்கும் தருவாயில் நான் எதிர்பார்த்த விதம் அவரது அளவிலா ஆஸ்தி வராமல் வெரும் வசைக்காளாகினேன். மேலும் அவரிடமிருந்து இறப்பதற்கு சுலபமான வழியையும் தெரிந்தேன். இனி என் உயிர் நில்லாது. இந்திரநாத் என்பவனை வீணில் பழித்தேன்! அவ்விந்திராவின் பொருட்டு அவன் விரோதத்தை சம்பாதித்ததுமன்னியில் அவனுடன் குத்துச் சண்டையும் செய்தேன். அதன் பலன்தான் இது! நல்வேளையாய் எனக்கு நான் உட்கொண்ட மருந்து உதவப்போகின்றதே! இனி நான் இந்திராவை உயிருடன் காண்பேனென்ற ஆசையை ஒழித்துவிட்டேன். அவளைக் காணாதிருத்தலே நலம். ஐயோ! அந்த துரைசாணி என்னிடம் கொடுத்திருக்கும் உயிலையாவது அவளுக்கு நான் சேரும்படி செய்யவேண்டுமே! அவ்வொரு உபகாரமாவது நான் செய்யின்! ஹா இந்திரா! நீயே ஜயித்தாய்! நானே தோற்றேன்! உலகத்தோரே! 'உண்மையே உலகுள்ளவரை வெல்லும். தீமை நசிக்கும்' என்பதை என்னிடமிருந்து பிரத்யக்ஷமாய் காண்பீராக.

அடே பாய் (Boy).

பையன் :—(பிரவேசித்து) ஸார்! யாரோ ஒருவர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார். ரொம்ப அர்செண்டாம்.

**இந்திரகுமாரன் :**—வரச்சொல்!

Boy போகின்றான்.

என்னை இத்தருவாயில் காண யார் வரப்போகின்றனர்? ஒருக்கால் நானிருக்கும் நிலைதெரிந்து இந்திராவே வந்திருப்பாளோ? அவள் வாராள். அவனைக் கெடுக்க முயன்ற பாபியையா பார்க்க வருவாள்! அவள் வரின்.......

*கண்ணாடியுடன் இந்திரநாத் பிரவேசித்து இந்திரகுமாரனருகில் உட்காருகிறான்.*

நண்பரே! என்னை மன்னியும். நான் எவ்வளவோ துர்கிருத்யங்கள் செய்திருக்கின்றேன். அவையெல்லாம்தான் என்னை இக்கதிக்காளாக்கியது. உம்மையும் அனியாயமாய் பகைத்துக்கொண்டேன். ஆயுள் முடியும்பொழுது விரோதங்கொள்ளாதீர்? நீர்தான் எனக்கு உதவவேண்டும். அப்படிச்செய்வீரா?

**இந்திரநாத் :**—குமாரா.

**இந்திரகுமாரன் :**—ஐயா! இன்றென்ன! நீர் யார்? என்னை குமாரா என பழய நண்பர் சுரேந்திரர் குரலில் கூப்பிடுகின்றீர். என்னை அழைத்துச்செல்ல வந்திருக்கின்றீரா?

*திரு திரு என்று முழிக்கின்றான்.*

**இந்திரநாத் :**—பயப்படாதே! நான் ஒன்றும் உன்னை செய்யேன். நண்பா! நான் உன்னை முற்றிலும் நம்பியிருக்க.......

*கண்ணாடியைக் கழட்ட.*

**இந்திரகுமாரன் :**—(கீச் என்று கூச்சலிட்டு கண்ணை இரு கைகளாலும் மூடிக்கொண்டு) ஐயோ! அழிந்தேன்! அழிந்தேன்! பிசாசு! பிசாசு! அடே Boy. யாரடா அது வெளியே விரட்டுங்கள்! கொலைகாரன்! ஐயோ! ஐயோ!



*எழுந்து நாலாபக்கமும் ஓட, சக்தியற்று கீழே விழுகிறான்.*

**இந்திரநாத் :**—(அவனிடம் சென்று தடவிக்கொடுத்து) எழுந்திரு குமாரா! பயப்படாதே. நான்தான் உனது நண்பன் சுரேந்திரன். பிசாசுமல்ல ஒன்றுமல்ல. உயிருடனே உன்னைக் காண வந்திருக்கின்றேன். பயப்படாதே.

**இந்திரகுமாரன் :**—ஐயோ! நான் மாட்டேன்! பிசாசுதான்! சந்தேகமில்லை! நீ ஒழிந்துபோகாயா? இன்னுமேன் என்னை சங்கடப்படுத்துகின்றாய்? நான்தான் இன்னும் அரைநாழிகையில் மாளப்போகின்றேனே! ஈசா! இதுவோ மரணாவஸ்தை. ஐயோ!

*கொஞ்சம் கையை எடுத்துப் பார்த்து*

ஐயோ! இன்னும் செல்லவில்லையே! என்னையே ஏறிட்டுப் பார்த்துக்கொண்டு அருகில் நிற்கின்றதே! என் செய்வேன்!

**இந்திரநாத் :**—குமாரா! பயம் வேண்டாம். நான் உனது பழய நண்பன்தான். நான் சாகவில்லை. உயிருடனேயே இருக்கின்றேன்; பயப்படாதே.

**இந்திரகுமாரன் :**—ஐயோ! பிசாசும் பேசுமா? என்னை ஏமாற்றும் பிசாசா? இது புதிதாகவன்றோ இருக்கின்றது. நான் செய்த துர்கிருத்யங்களுக்கு நல்ல தண்டனையே! ஐயோ! ஒருவருமில்லையா இத்தருணத்தில்?

**இந்திரநாத் :**—(கையை விலக்கி மடியில் சாய்த்துக்கொண்டு) நண்பா! என்ன இருப்பினும் நீ எனது நண்பன் தான். கண்ணை விழி. நான் பிசாசு அல்ல. பழய நண்பன் சுரேந்திரனே. உன்னைப் பார்த்துப் போகவே இங்கு வந்தேன். இந்தா, என்னைப் பார். பயப்படாதே.

**இந்திரகுமாரன் :**—(மெல்லக் கண் விழித்து) நீ சுரேந்திரனல்ல! தலைமயிரெல்லாம் வெளுத்திருக்கிறதே? நீ இந்திரநாத். கண்ணாடியைக் கழட்டி இருக்கின்றாய். ஆனால் பார்வைக்கு சுரேந்திரனைப் போலவே இருக்கின்றாய். உனக்கு என்னால் ஆகவேண்டியது என்ன? சீக்கிரம் சொல்.

**இந்திரநாத் :**—நண்பா! பயப்படாதே. நான் உன்னை ஒன்றும் செய்யேன். என் வார்த்தையை நம்பு.

**இந்திரகுமாரன் :**—உன்னால் இனி எனக்கு ஒன்றும் செய்ய முடியாது. இன்னும் கொஞ்சநேரத்தில் இறக்கப் போகின்றேன். அதற்கு முன்,

*சட்டையிலிருந்து ஒரு கவரையெடுத்து*

நீ சுரேந்திரனாயிருப்பினும் சரி, இந்திரநாத்தாயிருப்பினும் சரி, இக்கடிதத்தில் கண்டிருக்கும்படி நடப்பாயாகில்,

*கடிதத்தையும் கொடுத்து*

நான் சந்தோஷத்துடனாவது, ஒருயிர் சந்தோஷப்படும் என்ற எண்ணத்துடனாவது, மறிப்பேன், நடப்பாயா நண்பா?

**இந்திரநாத் :**—கவலைபுராதே. அப்படியே செய்கின்றேன். நண்பா! இனி பயப்படாதே.

**இந்திரகுமாரன் :**—நீ யாராயிருப்பினும் சரி. நான் செய்த பிழைகளை மன்னிப்பாய். நான் பெரும் பழிகாரன். உலகிலிராதிருத்தலே நலம். நண்பா! எனக்கொரு சத்யம் செய்துதா? தருவாயா? சாகப்போகும் மனிதனின் கடைசி வேண்டுகோளுக்காவது இணங்குவாயா?

**இந்திரநாத் :**—உனக்கென்னவேண்டும் சொல். நீ கவலையுராதே. எதுவேண்டுமாயினும் செய்கிறேன்.



**இந்திரகுமாரன் :**—அதைச் சொல்கிறேன். உனது உண்மை விருத்தாந்தத்தை முதலில் ஒளியாது கூறுவாய்.

**இந்திரநாத் :**—கேள் நண்பா! நானிறந்தேனென எண்ணி என்னை நீங்கள் அடக்கம் செய்யவும், நான் மறுபடி பிழைத்து எழுந்தேன். வீடடைந்து, தோட்டத்திற்கு வரும் சமயம், நீயும் இந்திராவும் பேசியதையும், நீ அவள்மேல் காதலுற்றிருந்ததையும் அறிந்தேன். புத்தி தடுமாறி பழிவாங்க எண்ணங்கொண்டு, அயல் நாடு சென்று அளவிலா திரவியத்துடன் இந்திரநாத் என்ற மாறு பெயர் வைத்துக்கொண்டு உன்னாலேயே என் வீடு அழைத்துவரப்பட்டேன். நீ ஊரிலில்லா சமயம், அவள் தன்னை உன்னிடமிருந்து காப்பாற்ற வேண்டினாள். அப்பொழுதுதான் அவள் கற்பிற்கு பங்கமேற்படவில்லை என நம்பவும் நேர்ந்தது. ஆனால் நான் இன்னாரென ஒருவருக்கும் இன்னும் தெரியாது. அவளை ஆஸ்பிடலில் நர்ஸாக ஏற்படுத்தி வீட்டைவிட்டு வெளியேற்றியதால், நீ என்மீது கடுங்கோபமும் சந்தேகமும் கொண்டு, என்னை சண்டைக்கிழுத்து, அடியும்பட்டு கிடக்கின்றாய். உன்னையும் பார்த்து நான் இன்னாரென சொல்லிப்போகவே வந்தேன். நண்பா! நான் பழய நேசன் சுரேந்திரனே. இதோ கையில் பார் பழய மச்சம்.

*கையை நீட்டுகின்றான்.*

**இந்திரகுமாரன் :**—(காலைப் பிடித்துக்கொண்டு) சுரேந்திரா! சுரேந்திரா! (கண்ணீர்வடித்து) இப்பாவியை இனித் தீண்டாதே! பாவி இன்னும் உயிர் நீங்காமலிருக்கின்றேனே. ஐயோ! நண்பா! எனக்கு சத்யம் செய்து கொடு? நான் நிம்மதியாகவாவது இறக்கட்டும் சீக்கிரம்.

**இந்திரநாத் :**—எவ்வளவுதரம் நான் சொல்லவேண்டும். இதோ சத்யம்! சத்யம்! சத்யம்! போதுமா?

கையிலறைந்து கொடுக்கின்றான்.

**இந்திரகுமாரன் :**—நண்பா! நீ பழய சு ரே ந் தி ர னே! உன் குரல் பழைய சுரேந்திரனுடையதே. மார்பு அடைக்கின்றது. உன்மேல் சாத்திக்கொள்.

**இந்திரநாத் :**—நண்பா! பயப்படாதே. உனக்கு ஒன்றும் இல்லை.

கண்கள் சுழலுகின்றன.

**இந்திரகுமாரன் :**—சு ரே ந் தி ரா.

ஈனஸ்வரத்துடன்

அம்——மாதரசியை——கைவிடாதே——கவரில்——சொல்லியபடி.

மூச்சு நின்றுவிடுகிறது....

## SCENE II.

ருத்ரவீரன் வீடு.

ருத்ரவீரன் பின்வரும்வண்ணம் யோசித்து நிற்கின்றான்.

மாலை நேரம்.

**ருத்ரவீரன் :**—சம்சாரத்தினின்றும் விடுபட்டிருந்த எனக்கு இப்பொழுது இப்புதிய குழந்தை அகஸ்மாத்தாக அகப்பட்டிருக்கின்றது! எனது தனிமையை விலக்க கடவுளே அனுப்பியிருக்கின்றார் போலும்! அதிர்ஷ்டம் வருங்கால் ஒன்றுசேர்ந்து வரும் என்று சொல்லும் வசனம் சரியே. எனக்கிருக்கும் அளவிலா ஆஸ்தி எம்மஹாராஜாக்களுக்கும் கிடையாதெனவே கூறலாம். தினம் குழந்தைக்கொன்றொன்றாகவே நகைகளைப் போட்டு நேத்ரானந்தம் அடைகின்றேன். குழந்தையும் அப்பெட்டிகளைப் பார்க்கவேண்டுமாம்! அதை நாளை அழைத்துப்போகலாமென உத்தேசித்திருக்கின்றேன். குழந்தையை நன்றாகப் பார்ப்பின் இறந்துபோன சுரேந்திரனின் முகச்சாடை இருப்ப



தாகத் தோன்றுகிறது! இதை நம் வீட்டிற்கருகிலுள்ள கடற்கரையிலன்றோ கண்டோம்! இதை யார் அங்கு தனிமையில் விட்டிருப்பார்கள்? இதை ஒருவரும் இவ்வளவு நாட்களாகியும் தேடி வரக்காணோமே! ஏன் வருவார்கள்? அச்சுரேந்திரனின் பெண்சாதியைப் பற்றித்தான் அனைவருக்கும் தெரியுமே! அப்படியிருக்க இது ஒழிதல் அவளுக்கு நலமே. அப்பெண் என்னிடம் வந்தநாள் முதல் என் அளவிலா அன்பிற்கு ஆளாகியது. அதைவிட்டு அரைக்ஷணமும் பிரிய மனம் வரவில்லை.. அந்த லெட்டரில் கண்டபடி எனது பெண்ணை என்று காண்பேனோ! ஈசா எல்லாம் உமது மாயைதான்!

லீலாமணி வருகின்றாள்.

கண்ணே லீலா! எங்கடி போயிருந்தாய்?

**லீலாமணி :**—தாதா! இன்னும் எத்தனை நாள்தான் ஏமாத்தப்போகிறீர்கள்? எங்கள் நாயினா இருந்தால் அப்படிச் செய்வாரா?

கொஞ்சுகிறாள்.

**ருத்ரவீரன் :**—கண்மணி! நான்தான் நாளக்கி இன்னேனே. பாரேன் நாளக்கி. உனக்கு எவ்வளவு நகையிருக்கின்றது என்று!

**லீலாமணி :**—ஆனால் நான் அத்தனையும் எடுத்துக்கலாமோ?

**ருத்ரவீரன் :**—ஊம். எல்லாம் உன்னுடையதுதானே.

**லீலாமணி :**—ஆனால் எங்கம்மாவுக்கு, கமலாவுக்கு, மங்காத்தாவுக்கு எல்லாருக்கும் கொடுப்பேன்! ஊம் உனக்குங்கூட தரேன்.

**ருத்ரவீரன் :**—சரி! உன்னிஷ்டம்போல் செய். உங்கம்மா யார்? எங்கேயிருக்கா? சொல்லு பார்ப்போம்.

**லீலாமணி :**—எங்கம்மாவை சொன்னால் என்னை அங்கு கொண்டுபோய் விட்டுவிடுகிறீர்களா?

**ருத்ரவீரன் :**—இதுவரை (இக்குழந்தையைப்பற்றிய வரலாறு ஒன்றும் தெரிந்துகொள்ளவில்லை. இவள் வாயிலிருந்து ஏதாவது வருகிறதா பார்ப்போம்.) அப்படியே செய்கின்றேன். உங்கம்மா யாரு? நாயினு நாயினு என்கிறாயே அவர் எங்கிருக்கிறார் சொல்லு?

**லீலாமணி :**—நானு எங்க அம்மாகிட்ட இருக்கவே மாட்டேன். அவள்தான் எப்பவும் அழுதுண்டு இருக்கா. எங்க மங்கத்தா இருக்காபாரு, அவதான் என்கூட விளையாடுவ. எனக்கு சாதங்கூட ஊட்டுவளே; அப்பொ கதை சொல்லுவ, நானுகூட சமத்தா கேட்டுண்டு சாப்பிடுவேனே! நீதான் கதை கேட்டா சொல்லமாட்டேனென்கிறாயே!

**ருத்ரவீரன் :**—உங்க நாயினு எப்படி இருப்பார்? எங்கே இருக்கார் சொல்லு?

**லீலாமணி :**—மொள்ள சொல்றேன்! அவசரப்படாதே. அப்புறம் அம்மாதான் நாயினு பூட்டாரு பூட்டாரு இன்னு அழுராளே. இல்லவே இல்லேயே. அவர் வந்துடுவாரு இல்லே!

**ருத்ரவீரன் :**—குழந்தாய் உங்கவீடு எங்கேயிருக்கு?

**லீலாமணி :**—எங்காந்தான் பெரிய (கையை காண்பித்து) மெத்தை வீடாச்சே! நீயுங்கூட வரயா? எல்லாரும் சேர்ந்து இருக்கலாம். எங்க மங்கத்தா நல்லவள். உனக்குங்கூட சாதம் போடச்சொல்றேன். வரயா? வரும்போது எனக்கு வாங்கித்தந்தையே குச்சு நாக்குட்டி, அதையும் கொண்டுபோகணும். அதற்கு பிஸ்கோத் பால் எல்லாம் நான் கொடுப்பேன்.

**ருத்ரவீரன் :**—குழந்தை சொல் என்பது சரியாக இருக்கிறது. இதிலிருந்து நான் ஒன்றும் கிரஹித்துக் கொள்ள முடியவில்லை. எனக்கு இக்குழந்தை சுரேந்திரனின் பெண்ணாக இருக்குமோவெனவும் சந்தேகமாக இருக்கின்றது. நாளை நமது பொக்கிஷத்தி



லுள்ள நகைகளை குழந்தைக்குக் காண்பித்து, பிறகு சுரேந்திரர் வீடும் சென்றும் பார்ப்போம். அங்கு குழந்தையைத் தேடுகின்றார்களா எனவும் அறிவோம்.

பேபர்பாய் பேபர் கொண்டு வந்து போட, அதைப் படிக்கின்றான்.

என்ன விநோதம்!

மற்றுமோர்முறை படிப்போம்.

| மணம் | திருமணம் | மணம். |
| --- | --- | --- |

இந்திரா என்னும் 35 வயதுள்ள மாதுக்கும், இந்திரநாத் என்னும் புமானுக்கும். அனைவரும் காலை எட்டு மணிக்கு மஹேந்திரமஹாலில் நடக்கும் பார்ட்டிக்கு வருமாறு அழைக்கப்படுகின்றனர்.

ஹா இந்திரா! உன் நாதனைப் பறிகொடுத்தது மன்னியில் மறு மணமும் செய்துகொள்கின்றனையா? உன் மனம் எவ்வாறு துணிந்ததோ. சுரேந்திரனின் பார்யை மற்றொரு புமானை மாலை சூட்டுவதா? இது என் மனதிற்கு ஒப்பவில்லையே! எப்படியும் இவ்விவாகத்தை நிறுத்த நான் ஏற்பாடு செய்யவேண்டும். ஆனால் என்னால் என்ன செய்யமுடியும்? பல்லைப் பிடுங்கின பாம்பு. ஈசனுக்கு இவ்விவாஹம் சம்மதமாயிருப்பின் நாமென்ன செய்யலாம்? எல்லாம் விதியின் படியன்றோ நடக்கும்! ஈசா இதுவோ உனது திருவுளம்!

**லீலாமணி :**—தாதா! தாதா! என்ன நீங்களே என்னமோ பேசிக்கொள்கிறீர்களே? எனக்குச் சொல்லக் கூடாதா? அப்புறம் நாளைக்கு வரகளோன்னே? எனக்கு நாளைக்கு அம்பட்டு நகைகளும் காமிக்கணும்.

**ருத்ரவீரன் :**—ஆகட்டும் கண்ணே. காத்து ஜில்லென்று அடிக்கிறது. உள்ளே போவோம் வா.

## SCENE III.

இடம்—சுரேந்திரர் வீட்டு சவக்குழி.

ஓர்புரம் இந்திரநாத்தும் இந்திராவும் வருகின்றனர்.

மற்றோர்புரம் ருத்ரவீரன் லீலாமணிக்கு பெட்டிகளைத் திறந்து காண்பித்துக்கொண்டிருக்கிறான்.

காலம் — காலை நேரம்.

இந்திரா :—ஐயா! அவர்கள் பார்டி முடியுமுன் நாம் போக வேண்டாமா? இங்கெங்கு அழைத்துச்செல்கிறீர் என்னைத் தனிமையாக?

இந்திரநாத் :—நீயோ என்னை முற்றும் நம்பிவிட்டாய், என்னுடைய ஆஸ்திகளையெல்லாம் உனக்கு காண்பிக்க வேண்டாமா? அவைகளையெல்லாம் காண்பித்தபிறகன்றோ, நாம் வெளிச்செல்லவேண்டும். அதிருக்கட்டும். நாம் இப்பொழுது வந்திருக்குமிடம் எது என்று உனக்கு தெரியுமோ?

இந்திரா :—அது என்ன அப்படிக் கேட்கின்றீர்கள்? இது எங்கள் வம்சத்து சவக்குழி என நன்கறிவேன். உம்மை நம்பியதால் நீர் எங்கு அழைத்துச்சென்றபோதிலும் பயமில்லாது வருகின்றேன். இங்கு வந்தும் நேரமாகின்றது. மூச்சும் திணற ஆரம்பிக்கின்றது. சீக்கிரமே செல்லவேண்டும்.

இந்திரநாத் :—பெண்ணே! இந்தப்பெட்டியில் என்ன எழுதியிருக்கின்றது கண்டனையா?

இந்திரா :—ஹா! இது என் நாதரின் சவப்பெட்டி. ஐயோ நாதா! என்னை மன்னிப்பீர். பாவி உம்மைத் தீண்டாதவள் இதோ வந்திருக்கின்றேன். நீர் என்னை மன்னியும். என்னை பாதுகாத்த புமானை சரணமடைந்திருக்கின்றேன். ஆசீர்வதியும்.

இந்திரநாத் :—இதில்தான் உன் நாதர் அடக்கம் செய்யப்பட்டாரோ?



பெட்டியைத் திறந்து

இதென்ன இந்திரா பெட்டி கலைந்திருக்கிறது?

இந்திரா :—(எட்டிப்பார்த்து) ஹா! என் நாதரின் சவத்தைக்கூட காணோமே! அது எங்கு சென்றிருக்கும்? ஐயோ! (மூர்ச்சையடைகின்றாள்.)

இந்திரநாத் :—(மூர்ச்சை தெளிவித்து) சரி! இந்திரா, சற்று காற்றுவாங்கிவிட்டு வருவோம் வா. அது எங்கு போயிருக்கப்போகின்றது? எல்லாம் இங்குதான் எங்காகிலுமிருக்கும்.

இந்திரா முன் சொல்ல, இந்திரநாத் பின்னால் வருகின்றான்.

லீலாமணி :—தாதா இதுதானா நகைகள்? ரொம்ப நன்னா, ஜொளுப்பாயிருக்கு. இதையெல்லாம் நான் எடுத்துக் கொள்ளப்போகிறேன்.

ருத்ரவீரன் :—அப்படியே செய்! இதென்ன நகைகள் குறைந்திருக்கின்றன! யாரேனும் திருடர்கள் வருகின்றனரோ? ஆஹா! இவ்விஷயம் வெளிக்குத் தெரிந்திருக்குமோ? இதென்ன காலடிச்சத்தம்!

மடியிலிருந்து பிச்வாவைக் கையிலெடுத்துக்கொண்டு

யார் வரினும் சரி, இதற்கு இரையாவது திண்ணம். (காலடிச்சத்தம் வரும் திசையைப் பார்த்தவண்ணமிருக்க)

லீலாமணி :—தாதா! இந்தப்பெட்டியைப் பாரேன். இதென்ன தாதா கடுதாசி? இதெல்லாம் எடுத்து வைக்கப்போறேன்.

கீழே எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறாள்.

இந்திரா கிட்ட நெருங்குவதைக் கண்டு,

ருத்ரவீரன் :—கண்டேன்! பாதகி!! திருடியை இதோ கொன்றேன்.

விரைந்து ஒரு கையால் பிச்வாவைப் பிடித்துச் செல்லவும், அவள் ஒரு கையை கீழேயூன்றி அவன் முகத்தைப் பார்த்த வண்ணம், மற்றொரு கையால் தடுக்க முயன்றும் இருக்க, திடீரென இந்திரநாத் ஓடிவந்து அவன் ஓங்கிய கையைப் பிடிக்கவும், அச்சமயம் அவன் கண்ணாடி விழவும், குழந்தை சத்தத்தைக்கேட்டு பார்த்து 'அம்மா' என்று கட்டிக்கொள்கிறது.

**இந்திரநாத் :**—ஐயா பெரியவரே என்ன காரியம் செய்யத் துணிந்தீர். விடும் வாளை ! இவளென்ன உமக்கு தீங்கிழைத்தனள் ?

**இந்திரா :**—(கண்ணாடியன்னியிலிருக்கும் இந்திரநாத்தைக் கண்டு) நாதா ! நாதா ! (எனக் கட்டிக்கொள்கிறாள்.)

**லீலாமணி :**—தாதா ! ஏன் எங்க அம்மாவை குத்த வருகிறீர்கள் ? இதுதானா எங்கம்மாகிட்ட கொண்டுவிடுகிறேன்னது !

**இந்திரா :**—(குழந்தையை எடுத்து முத்தமிட்டு) கண்ணே ! நீ எங்கேயடி என்னைவிட்டுப் போயிருந்தாய் ? உன்னைக் காணாமல் நானென்ன அழுதேன் தெரியுமா ?

**லீலாமணி :**—அம்மா ! (சுரேந்திரனைக் காண்பித்து) இதுதானே எங்க நாயினா ?

**இந்திரநாத் :**—ஆம் கண்ணே ! (முத்தமிடுகிறான்.)

**லீலாமணி :**—நான்தான் அம்மா முன்னே புடிச்சு நாயினா வருவா, நாயினா வருவா என்று சொன்னேனே! வந்தா பாத்தயா ! சாமி பொய் சொல்வாரா?

**இந்திரா :**—சாமியா சொன்னாரு உனக்கு?



**லீலாமணி :**—ஆமம்மா ! நீ அழாபோதெல்லாம் எனக்கும் அழுகைவரும். அப்போ கண்ணே மூடிக்கொண்டு சாமிக்கு கும்பிட்டுட்டு, சாமி எங்க நாயினாவை எங்கிட்ட அனுப்பணும் என்று கேட்பேன். அவரும் பயப்படாதே, வருவாரு என்று சொல்லுவார். அதான் நான் சொன்னேன்.

**இந்திரநாத் :**—ருத்ரவீரரே ! அன்று நான் உமக்குக் கொடுத்த வாக்கையும் நிறைவேற்றினேன். என் பெண் சாதிதான் இவ்விந்திரா.

**ருத்ரவீரன் :**—ஹா ! நீ சுரேந்திரனா ! இறந்துபோன சுரேந்திரனா !! (கட்டிக்கொள்கிறான்).

**இந்திரநாத் :**—ஆம் ! என் பெண்சாதியை முற்றும் சோதித்தேன். அவளிடம் கொஞ்சமும் கல்மஷமில்லை இது காறும். ஆகையால் அவளுடன் கூடலாமெனவே எண்ணி, உம்மிடம் ஆசி வாங்கிச் செல்லவும் வந்தேன். வரும்வழியில் என் பெண்ணை சந்திக்கும் பாக்யமும் பெற்றேன்.

**ருத்ரவீரன் :**—(லீலாமணியை தன்னிடமிழுத்து) உனது பெண்ணா இவள் ? எனக்கு ஈசனால் அளிக்கப்பட்ட பேத்தி என இவளை, அன்று கடற்கரையில் கண்டது முதல், என் வீட்டிலேயே வளர்த்து வருகின்றேன். கண்ணே லீலா ! வா ஆத்துக்குப்போவோம்.

**லீலா :**—என்ன தாதா ? நான்தான் முன்னாலேயே சொன்னேனே. எங்கூட எங்காத்துக்கு வாருங்கோ, பெரிய ஆமாயிருக்கு, எங்க மங்காத்தா சாதம் போடுவா. அம்மா, மங்காத்தா ஆத்திலே இருக்காளா ?

**இந்திரா :**—கண்ணே ! உன்னைக் காணுமே என்று அழுதுகொண்டு இருக்கா.

**லீலா :**—ஆனால் சீக்கிரம் வாருங்கள் போவோம்.

ருத்ரவீரன் கையைப் பிடித்து

**ருத்ரவீரன்** :—இவ்வானந்தத்தில் என் பெண்ணும் இன்னாரென தெரியவருமாயின் !

**சுரேந்திரன்** :—பிரியே ! உனக்கு உன் நண்பனால் இன்று ஓர் ஸீல்ட் கவர் கொடுக்கவேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது. அதுவும் இதோ இருக்கிறது. இதை வாங்கிக்கொள். (கொடுக்கிறான்.)

**இந்திரா** :—நாதா ! எனக்கெதற்கு அது ? நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். உம்மைத்தவிர வேறெனக்கு என்னவேண்டும் ? அந்த ஸ்வர்க்கப்பதவியே வரினும் நான் வேண்டாமென்றல்லவோ சொல்லுவேன் !

**லீலா** :—என்ன நாயினா, அது காகிதமா ? அதெல்லாம் வேண்டாம் நாயினா. எனக்குத்தான் தாத்தா நிறைய நகைகளும், நோட்டுகளும் கொடுத்திருக்காளே. அம்மா, அழாதே நான் உனக்கு நிறைய தரேன். அப்பா நீயும் கவலைப்படாதே. தாதா நீங்கள் என்னோடே எப்பவும் இருக்கணும். இருக்கிறீர்களா ?

**ருத்ரவீரன்** :—ஈசன் திருவுளமெப்படியோ ?

**சுரேந்திரன்** :—(கவரைப் பிரித்து அதிலிருந்து ருத்ரவீரனுக்கு என்று போடப்பட்டிருக்கும் கடிதத்தை எடுத்து அவனிடம் கொடுக்கிறான்).

**ருத்ரவீரன்** :—(படித்துவிட்டு) என்ன ! கண்டேன் எனது பெண்ணை ! இந்திரா, என்னருகில் வா ! என் புத்தி தடுமாறும்போலிருக்கிறது இவ்வானந்தத்தில். நீ எனது குமாரியா ?

**லீலா** :—தாதா ! நீ எங்க தாதா தானா ?

**ருத்ரவீரன்** :—அனைவரும் சீக்கிரமே எனது வீடு செல்வோம் வாருங்கள்.

போகிறார்கள்.

மங்களம் மங்களம் மங்களம் !!!

188771

| தே | தமி. | வார. | திதி, நக்ஷத்திரம், தியாஜ்ஜியம், யோகம முதலியன. |
|---|---|---|---|
| 1 | ௧௯ | ஞாயி | பஞ் ௪௭-௨௭, பூச ௫௨-௪௩, தி ௫-௨௩, சி. |
| 2 | ௨0 | திங் | ஷஷ் ௪௧-௨௫ ஆயி ௩௮-௪0, தி ௧௨-௩௩, [ஷஷ்-௨ப, சி,ம |
| 3 | ௨௧ | செவ் | ஸப் ௩௫-௩௧ மக ௩௪-௪௫, [தி ௯-௪௨, தி ௫௩-௩௪,சி. |
| 4 | ௨௨ | புத | அஷ் ௨௯-௫௯, பூர ௩௧-௧௧, [தி ௪௮-௧௯, அ. |
| 5 | ௨௩ | வியா | நவ ௨௪-௫௭, உத் ௨௮-௮, [தி ௪௮-௪, ம,சி |
| 6 | ௨௪ | வெ | தெ ௧௯-௫0, ஹஸ் ௨௫-௫. [தி ௪௪-௫௧,திதிதுவய,அ,சி. |
| 7 | ௨௫ | சனி | ஏகா ௧௭-௧௧, சித் ௨௪-௨௪,தி ௩௮-௧௯, ஏகா, ம, அ. |
| 8 | ௨௬ | ஞாயி | துவா ௯௪-௪௯,சுவா ௨௪-௧,தி ௩௮-௧௨,பிரதோ,சி,ம. |
| 9 | ௨௭ | திங் | திர ௧௩ ௩௯, விசா ௨௪-௫0, தி ௩௫-௧0. ம,சி. |
| 10 | ௨௮ | செவ் | சது ௧௩-௩௩, அனு ௨௯-௫௩, தி ௪௧ ௩௯, சி. |
| 11 | ௨௯ | புத | ○ ௪௪-௫௧,கேட் ௩0 ௧0,தி ௫௧-௩௯ சி,ம. [திதி,சி) |
| 12 | ௩0 | வியா | ஜேஷ்-தி பிர ௧௭-௨௩,மூல ௩௪-௩௯,தி ௩0-௪௮,து) |
| 13 | ௩௧ | வெ | துவி ௨0-௫௫,பூரா ௩௯-௫௯,தி 0-௪௯,கு-திதி, [அஹ ௩௧-௩௩, சி. |
| 14 | ௩௨ | சனி | திரு ௨௫ ௧௨,உத்ரா ௪௫-௫௯,தி ௧-௫௭ தி ௫௭-௩, [மிதுனரவி ௩௯-௩௧, அதிதி, சி. |
| 15 | ௧ | ஞாயி | சது ௩0-௫,திரு ௫௨-௨௧,சே ௧-௧௧,சி-௨,அதிதி அ,ம |
| 16 | ௨ | திங் | பஞ் ௩௫-0, அவி ௫௮-௪௫, தி ௩-௨௫, அதிதி, சி. |
| 17 | ௩ | செவ் | ஷஷ் ௩௯-௩௩ சத ௯0-0, தி ௧௮-௩௧,ஷஷ்-திதி,ம. |
| 18 | ௪ | புத | ஸப் ௪௩-௩௧, சத ௪-௩௭, தி ௨௨-0, சி, அ |
| 19 | ௫ | வியா | அஷ் ௪௯-௨௭,பூரட் ௯-௪௯,தி ௩௫-௨௭,காலாஷ், சி. |
| 20 | ௬ | வெ | நவ ௪௮-௨௧, உத்ரட் ௧௩-௫௫, தி ௪௫-௧, சி,அ |
| 21 | ௭ | சனி | தெ ௪௮-௨,ரேவ ௧௯-௮,தி 0,ம சி [கடகா ௮-௩,சி) |
| 22 | ௮ | ஞாயி | ஏகா ௪௮-௯, அசு ௧௮-௨௫, தி ௮-௧0, தி ௪௨-௪௭, ( |
| 23 | ௯ | திங் | துவா ௪௯-௧௩, பர ௧௯-௫, ☼,தி ௪௮-௪௫,கார்-௨ப, |
| 24 | ௧0 | செவ் | திர ௪௩-௮, கார் ௧௮-௨௯, தி ௫௭ ௧௯,சி,அ [சி.ம, |
| 25 | ௧௧ | புத | சது ௩௯-௧0,ரோ ௧௯-௪௫,சே 0-௫௭,தி ௩0-௧0,சி. |
| 26 | ௧௨ | வியா | ● ௩௪-௨௧, மிரு ௧௪-௧௫, தி ௩௪-௭, அமாவாஸை,ம. |
| 27 | ௧௩ | வெ | ஆஷா-சுக்-பிர ௨௮-௫௭,திரு ௧௧-௧, தி ௩௯-௧௧, ‿,சி |
| 28 | ௧௪ | சனி | துதி ௨௩-௯,புன ௭-௨௧,தி ௨௯-௧, திதிதுவயம், சி. |
| 29 | ௧௫ | ஞாயி | திரு ௧௭-௯,பூச ௩-௨௧,ஆயி ௫௫-௫௩, தி ௩௩-௯,சி,சி, |
| 30 | ௧௬ | திங் | சது ௧௧-௩,மக ௫௫-௧௫,தி ௨௭-௧௪,ம,சி. [ட. |

| | செ ரா-பு | சு-கு | சூரி |
|---|---|---|---|
| | 4 ரிஷ-பு | | |
| | 12 கட-சுக் | | |
| | 14 மிது-சூ | | |
| | 22 ரிஷ-செ | | |
| | 24 மி புத | | |
| சனி | | கே | |

இந்தியா, பர்மா, ஸிலோன் டு இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

ஸிங்கப்பூர், பினங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15. வெளி நாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2. நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்

(3) சந்தாதாரர்கள் நமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இரு பாலர்க்கும் ஸௌகர்யம். வி. பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணா அதிகமாக செலவாகிறது. ஸிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தாநம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும், அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமானகாலம் முந்தியே அனுப்பவேண்டும்.


விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப் பக்கம் ரூ 20. அரைப் பக்கம் ரூ 11

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.


**பாலவித்யா ஆபீஸ்,**

**நெ 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.**

---


Printed and Published by N. Venkataraman,
at the Sri Vidya Press, Kumbakonam.